**KALANILAYAM.** தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ௵ அக்டோபர் ௴ 30௳ [No 43.

பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 841 |
| 2. | அப்பர் (பூமிப் பரிசை) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. | 843 |
| 3. | குறுந்தொகை (பாட்டு 276—292) K. இராமரத்நம் ஐயர் B.A. | 845 |
| 4. | தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப் படலம்) | 850 |
| 5. | கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. | 852 |
| 6. | தனிப்பாடல்—முருகன் நவாலி க. சோமசுந்தரம் பிள்ளை | 855 |
| 7. | பழமுதிர்சோலை (தங்கமேதான்)—சபரி | 856 |
| 8. | வர்த்தமானம் | 859 |

## கலாநிலயம்

### கள்வருங் காவலும்.

எல்லா விதத்திலும் பொல்லாதவர்க்கே புகலிடமாம் இவ் வழக்குமன்றங்களைச் சூழ்ந்து வாழ்கின்றவொரு வாழ்க்கை இன்றியமையாததாய்விட்ட இவ்வுலகின் இழுக்கினை எண்ணுங்கால் உளையும் உள்ளத்தால் எள்ளாது என்செய. "வழக்கு மன்றங்களும் 'வக்கீல்களும்' நீதிபதிகளும் 'போலீஸார்'களும் சிறைச்சாலைகளும் எமக்கு வேண்டா ; அவை யில்லையாயின் யாம் இனிது வாழ்வோம் ; இருப்பதாற்றான் எங்கள் பெருமை குன்றிக்கிடக்கின்றது", என்று எவரேனும் இயம்பத்துணிவாரேல் அவர்வாயை ஒரு கையாய் அடக்கு மிக்கால வுலகம். "ஐய ஐய, என் சொன்னாய். எங்கள் பொதுஉரிமையைக் காப்பதற்கு அரசியல்வாதங்களும் சபைகளும் கட்சிகளும் இருப்பதுபோன்றே எங்கள் தனிஉடைமையைக் காப்பதற்குக் 'கோர்ட்டு'களும், தீர்ப்புக்களும், போலீசும் தண்டனையும் சிறைச்சாலைகளும் வேண்டாவோ. இவை இல்லையேல் பின், எவர் உடல் எவர் உயிர் எவர் பொருள் நிச்சயம். வேண்டியவன் வேண்டியவற்றைத் திருடிக்கொள்ளமாட்டானா. நினைத்தவன் நினைத்தபடி கொன்றுவிடமாட்டானா. வாங்கிய கடனைத் திருப்பித் தருவதென்பதைக் கண்ணுற்பின் காணமுடியுமா. மானநஷ்டம் முதலியவைகளுக்குப் பின் எவ்விதத்தில் ஈடுசெய்துகொள்வது. எல்லாந் தலைதடுமாறிப் போகவோ சொல்லினாய்," என்றென்று நாவால் நவில்வதுமன்றி மனத்தொடு நம்பவும் நம்புவார் எண்ணிறந்தோர். அரசியல்சபைகளால் மாநுடஉரிமை காக்கப்படுகின்றதென்றும், பாடசாலைகளால் கல்வி வளர்கின்றதென்றும் நடமாடுகின்ற பொய்களைப் போன்றதொரு பொய்யே இவ் வழக்குமுறை மன்றங்களால் நமதுடைமை காக்கலாகி உலகினமைதி கைகூடுகின்றதென்று விவகரிப்பதும் ஆகும்.

உயரிய உண்மையின் நுண்மையை உணரவேண்டுமாயின் நமக்குக் கவிவரர்களல்லால் வேறு கதியில்லை. கோசலதேசத்தின்சிறப்பினைச் சாற்றவந்த கவிசக்கரவர்த்தி கம்பர், அங்குக் "கள்வாரிலாமைப் பொருள் காவலும் இல்லை" என்றாரே யொழியக் காவன் முறையமைப்பின் மிகுதியால் கள்வ ரிலரானார் என்று சாற்றினாரலர். வாழ்க்கை நலம்பெற்றுயர்வதற் குரியவொரு வாய்மையின்வைப்பு இவ்வாக்கியம். வீண்வழக்கிட்டலையும் கும்பல்களின் 'தலைவர்களது' வாய்பார்த்து நிற்கும் பேதைமையிற் பாழாகாது இத்தகைய உத்தமர்களது உண்மையை உட்கொள்ள மாந்தர் என்றைக்குத் தலைப்படுவாரோ அன்றைக்கே உய்ந்தவர்களாவரென்னலாம். தத்தம் நிறைகாக்கும் காவலல்லால் சிறைகாக்குங் காவலால் மகளிர் கற்பு நிலைப்பதென்பது இயலாமைபோன்றே மாநுட உடைமையேனும் அவர் குணநலங்களேனும் புறத்திருந்து வற்புறுத்தும் முறைகளால் காக்கப்பெறுமாறில்லை. இதனை ஓராது இயற்றுவதாற்றான் இக்காலக் காவலும் குணங்களும் எல்லாம் அவலமாய்க் கிடக்கின்றன.

வழக்குமன்றங்களுங் காவற்கூடங்களு மிருக்கவேண்டு மென்பது இன்றியமையாததோர் இயற்கையே என்ற எண்ணம் எல்லாரிடத்திலும் வழிவழியாய் வந்து குடிகொண்டிருக்கின்றதாகிலும்

வெண்ணத்திற்கு அடிப்படையாய கருத்து யாதென்பதைச் சிந்திக்குங்கால் பரிபவத்தைப் பரிபவமென்றுணராது பெருமையெனப் பாராட்டும் சிற்றறிவின் புலைமை புலப்படும். மாநுடப் பெருமையில் மனம் வைத்த மாந்தராவோர் வழக்குத்துறைகளைக் காணுங்கால் நாணத்தாலுடல் சுருங்குவார். தீமைக்கு வாயில் திறக்குமேல் அதனுள் தயங்காது செல்லுந் தன்மையோர் மாந்தர், என்பதன்றோ இதன் கருத்தாகி நிற்கின்றது. வழக்குமன்றங்க ளில்லையேல் வாங்கிய கடனைக் கொடுப்பாரிலரென்றும், சிறைச்சாலை யில்லையேல் களவாதி குற்றங்களை இழைக்காதார் இலரென்றும் கொண்டவொரு இரகசிய உணர்ச்சியாற்றான் மனிதருக்கு வழக்குமன்றங்களின்பால் நம்பிக்கை பிறக்கின்றதும் நிலைக்கின்றதுமாகின்றது.

“ஆம், இந் நம்பிக்கையில் என்ன வியப்பிருக்கின்றது; வஞ்சகர்களும் கள்வரும் தருமத்தை நோக்காத புன்மையோரும் பலர் இவ்வுலகி லில்லையோ” வெனக் கேட்கலாம். எனினும், இன்னவர் இருக்கின்றனர் என்னும் உண்மையை ஒவ்வுவது வேறு; அன்னவர் இருந்துதீர்வதே இவ்வுலகின் இயற்கை என்றெண்ணி விவகரிப்பது வேறு. வழக்கு முறைகளும், குற்ற வகைகளைச் சார்ந்த போலீஸ் சிறைச்சாலைகளும் இப் பின்னதைப்பற்றி நிகழ்வன. ஆனால் மானிடர் இயற்கையைத் தம் மதிநுட்பத்தால் நனித்துணர்ந்த புலமையினோர், ‘யாவரும் இயல்பினில் யோக்கியர்களே’ என்னுந் தூய்மைமிகு துணிவினராயிருக்கக் காணலாம். அயோக்கியர் சிலர் இருக்கின்றாரெனின், இயற்கையில் யோக்கியர்களாயிருந்தவர்களை அயோக்கியர்களாக்கிய செயற்கைக் காரணம் யாதெனச் சிந்தித்து அக்காரணத்தை விலக்க முயலலன்றோ அறிவுடைய முறையாகும். மாநுட அம்சங்கள் பலவற்றில் தரும சிந்தனையும் ஒன்றாவதை முன் நாம் ‘கல்சரின்’ தன்மை அவசியம் முதலியவைகளைப்பற்றி வரைந்துள்ள தலையங்கங்களில் விளக்கியிருப்பதை நம் வாசகர் மறவாரெனின் இங்கு உரைப்பவைகளை யுணர்வது அருமையாகாது. இழிதகை நோக்கங்களை மக்களிடைப் புகுத்திச் சூழவைப்பதே அத் தரும சிந்தனை தலைசாய்வதற்குக் காரணமாகும். அவ்விழிதகை நோக்கத்தின் பலதிறப்பட்ட தன்மைகளை யெல்லாம், ‘வளர்மாட மேல்வீடு சுவர்க்கம்’ என்று நினைக்குமொரு அடையாளத்திற்கு ளடக்கலாம். இந்நோக்கத்திற்கிணங்கிய கல்வி முறைகளும் வர்த்தகத் துறைகளும் அரசியலமைப்புக்களும் வளர்வதே கருமமென்று விவகரிப்பாரிடையில் இயற்கையி லுடன்பிறந்த தருமசிந்தனை தழைப்ப தெங்ஙனம். தருமம் சிதையும்படி நிகழ்கின்ற இச்செயற்கைக் காரணங்களால் பொய் வேடம் மிகுதிகாட்டிக் காட்டி வாழ்க்கையை ஒரு கையால் பாழாக்கிக்கொண்டே வருகின்றவர், மறு கையால் மக்கள் குணத்தையும் உரிமைகளையும் நீதிமன்றங்களையுங்கொண்டு காக்க முயல்வதெல்லாம் காட்டுத்தீயை மண்ணெண்ணெய் கொட்டி அவிக்கப் பார்ப்பதையே ஒக்கும். பொய்வழக்கு வெல்லாது என்ற நினைவினால் யாரேனும் மெய்வழி ஒழுகியிருக்கின்றாரோ! பொய்வழக்கு வென்றிருக்க எத்தனை கண்டிருக்கின்றோம். ‘தன்வழக்கு வென்றதெனில் இலாபம், இல்லையெனில் பின்னர்ப்பார்க்கலாம்’ என்ற கொள்கையன்றோ எல்லா வழக்குக்களையும் இயக்கி வைக்கின்றன. சிறைச்சாலைகளுக்கும் தண்டனைகளுக்கும் பயந்து எத்தனைபேர் குற்றங்கள் செய்யாமல் விடுகின்றனர். குற்றஞ்செய்தவர் எத்தனையோ பலர் தண்டனைக்கு ஆளாகாமல் தப்பியிருப்பதைக் காண்பவன், தானு மவ்வாறு தப்பினாலாகாதோ என்று துணிகின்றான். மற்றுஒருமுறை தண்டிக்கப்பெற்றதால்நற்புத்தி வந்து பின் செவ்விய ஒழுக்கத்திற் சேர்ந்தவன் மருந்திற்கும் ஒருவனில்லை யென்பது உலகெலாம் ஒருங்கே அறிந்ததோர் விடயம். குற்றங்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்கும் முறைகள் எத்தனை எத்தனையோ இருக்கவும் நாளுக்குநாள் அவை அதிகமாகின்றனவோ, குறைவடைந்து வருகின்றனவோ. காவல் மிகமிக இந்நாள் கொலையுங் களவும் அதிகமோ குறைவோ. காவலில்லாக்கால் இவை இதனினும் அதிகமாய் நிகழும் என்று எண்ணுவது பகுத்தறிவில்லாப் பேதைமை. காவலெல்லாம், குற்றம் செய்யலாகும் காலத்தையும் இடத்தையும் மாற்றிவைப்பின் வைக்கலாமேயன்றி நினைத்தவன் நினைத்த கொலை களவு முதலிய குற்றங்கள் நிகழாமலே களைய இயலாது. புரையோடிய புண் ஓரிடத்தல்லாக்கால் ஓரிடத்தில் கிளைத்தே தீரும்.

வழக்கு மன்றங்களும் சிறைச்சாலைகளும், வஞ்சனைகளையும் குற்றங்களையும் தடுப்பதற் கியன்றவைகளல்லவென்றவளவில் நின்றக்கால் அவை பயனற்றவை என்னுஞ் சொல்லொன்றிற்கே இலக்காகும். ஆனால், அவைதாம் இருந்து பூணும் பழியோ இதனினும் பெரியது. தடுப்பதற்கென்றமைந்த பொய் வழக்குக்களையும் களவனைய குற்றங்களையும் மேன்மேலும் இவை அதிக மாக்குகின்றன. கொடுக்கவேண்டிய கடனைத் தருவதற்கொருவன் ‘தவணைகள்’ பலவைத்துக் காலந்தாழ்த்தால் தாழ்ப்பானே யல்லாது, “உன்னிடத்தில் யான் கடனென்றும் வாங்கவில்லையே, (அல்லது வாங்கியதை முன்னரே திருப்பி விட்டேனே)” என்று பொய்கள் புகலத்தலைப்படுவதில்லை. கடன்காரர்கள் காலந்தாழ்ப்பதற்குக்காரணம் பெரும்பாலும் கொடுக்க இயலாமையேயாயிருக்கும். கையிலிருந்தும் கொடுக்காமல் வஞ்சித்துவிட வேண்டுமென்ற கருத்துடன் விவகரிக்கும் கடன்காரர்கள் மிகச் சிலரே. கோர்ட்டுக்களும் வக்கீல்களும் இல்லையானால் காலங்கடந்தேனும் கடனைக்கொடுத்து விடுவான். இயலாமலே போய்விட்டால் கடன் தந்தவன் காலில் விழுந்தேனும் தன்னைப்பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்வான். இப்படிக்கல்லாமல் பொய்களைச்சொல்லி அக்கடனையே மறுத்துவிட அவன் நெஞ்சம் இடந்தராது. ஊராரேசுவாரே என்று மஞ்சுவான். தருமசிந்தனை தலைசாய்ந்திடாது. ஆனால் இவனையே ‘கோர்ட்டிற்கு இழுத்துவிட்டால்’, உடனே அங்கு வந்து, ‘கடனே வாங்கவில்லை யென்றும், வாங்கியிருந்தாலும் அதனைத் திருப்பிக்கொடுத்தாய் விட்டதென்றும், வாங்கியிருந்து திருப்பாமலிருந்தாலும் இன்ன இன்ன காரணத்தால் பத்திரம் சட்டப்படி செல்லாதென்றும், முதலில் செல்லக்கூடியதாயிருந்தாலும் இப்பொழுது கால அவதி ஆய்விட்டதென்றும், ‘வாதியின் தாவா, பொய்யாகவும் மோசக்கருத்துடனுந் தன்மேலுள்ள விரோதத்தால் கொண்டு வரப்பட்டிருக்கின்றதென்றும், ஆகையால் அது தள்ளப்பட வேண்டுமென்றும், இவ்வழக்கின் செலவுதொகை தனக்குச் சேரவேண்டுமென்றும், மேன்மை தங்கிய கோர்ட்டாரவர்களை மிகவும் வணக்கமாய் வேண்டிக் கொள்பவனாகின்றானே”—இந்தப் பழியாருடையது.



# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

### 13. பூமிப் பரிட்சை.

[825-வது பக்கத்தொடர்ச்சி]

மண்ணி.

சிந்தையுந் தெளிவு மாகித் தெளிவினுட் சிவமு மாகி
வந்தநன் பயனு மாகி வாணுதல் பாக மாகி
மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த மண்ணித்தென் கரை [மேல் மன்னி
அந்தமோ டளவி லாத வடிகளாப் பாடி யாரே.

திரு ஆப்பாடி - திருநேரிசை 5.

கெடிலம். *

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவும்
உடையானை யதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தலுழ் புனன்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் [குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீ ரெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போல் யானே

சுந்தரர்.

அங்கையி னனலெரி யேந்தி யாறெனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமு நயப்பர் தென்றிசைக்
கேங்கைய தெனப்படும் கெடில வாணரே.

அப்பர் - பண் - காந்தார பஞ்சமம் 6.

துளங்குஞ் சுடரங்கைத் துதையவிளை யாடி
இளங்கொம் பனசாய லுமையோடிசை பாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலாரதி கையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே.

சம்பந்தர்.

பாலி.

சந்தன வேருங் காரகிற் குறடுந்
தண்மயிற் பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக் குவைகளும் பவளக்
கோடிகளுஞ் சுமந்துகொண் டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே.

சுந்தரர்.

முகலி (சுவர்ணமுகி).

மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலியின் கரையினி னன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி யாங்கணந் தும்பியே.

சம்பந்தர்.

* செல்வப் புனற்கெடில வீரட்டமும்,
சிற்றேமமும் பெருந்தண் குற்றாலமும்
தில்லைச்சிற் றம்பலமும் தென்கூடலூர்
தென்னனைக் காவுஞ் சிராப்பள்ளியும்
நல்லூரும் தேவன்குடி மருகலு
நல்லவர்க டொழுதேத்து நாரையூரும்
கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக்
கட்டங்கத் தோடுறைவர் காப்புக்களே.

திருவதிகை வீரட்டானம் - காப்புத் திருத்தாண்டகம் 1.

நீரோடைகள்.

அலையார் புனற்கங்கை நங்கை காண
வம்பலத்தி லருநட்ட மாடிவேடம்
தொலையாத வெற்றியார் நின்றியூரும் நெடுங் களமு
மேவி விடையை மேல்கொண்டு
அலையார் படைகையி லேந்தி யெங்கு
மிமையவரு முமையவரு மிறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கிடமே மன்னி னாரே.

திருவலஞ்சுழி - திருத்தாண்டகம்.

மலையின்மிசை தனின்முகில் போல் வருவதொரு
மதகரியை மழைபோ லலறக்
கொலைசெய்துமை யஞ்சவுரி போர்த்த சிவன்
மேவுமலை கூறி வினவில்
அலைகொள்புன லருவி பல சுனைகள்வழி
யிழிய வலனிலவு முதுவேலை
கலகலென வொளிகொள் கதிர்
முத்தமவை சிந்துகா ளத்தி மலையே.

சம்பந்தர்.

ஏரி குளம் முதலிய நீர்நிலைகள்.

சடையேறு புனல்வைத்த சதுர னாரும்
தக்கன்றன் பெருவேள்வி தடைசெய் தாரும்
உடையேறு புலியதண்மே லாகங் கட்டி
யுண்பலிக்கென் றூரூர னுழிதர் வாரு
மடையேறிக் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
மயிலாடு துறையுறையு மணாள னாரும்
விடையேறு வெல்கொடியெம் விமல னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே.

திருவெண்ணி—திருத்தாண்டகம் 4.

கானிரிய வேழ முரித்தார் போலுங்
காவிரிப்பூம் பட்டினத் துள்ளார் போலும்
வானிரிய வருபுரமூன் றெரித்தார் போலும்
வடகயிலை மலையதுதம் மிருக்கை போலும்
ஊனிரியத் தலைகலனா வுடையர் போலும்
உயர்தோணி புரத்துறையு மொருவர் போலும்
தேனிரிய மீன்பாயுந் தெண்ணீர்ப் பொய்கைத்
திருச்சாய்க்காட் டினிதுறையுஞ் செல்வர்தாமே.

திருச்சாய்க்காடு—திருத்தாண்டகம் 3.

வாளையுங் கயலும் மிளிர் பொய்கை
வார்புனற் கரையரு கெலாம் வயற்
பாளையொண் கமுகம் புறவார்...பனங்காட்டூர்ப்
பூளையுந் நறுங்கொன்றையும் மத்தமும் புனைவாய்
கழலிணை தாளையே பரவுந் தவத்தார்க் கருளாயே.

சம்பந்தர்—திருப்புறவார் பனங்காட்டூர் 3.

கைத்தலை மான்மறியேந்திய கையன் கனன் மழுவன்
பொய்த்தலை யேந்திநற் பூதியணிந்து பலிதிரிவான்
செய்த்தலை வாளைகள் பாய்ந்துகளுந் திரு வேதிகுடி
அத்தனை யாரா வமுதினை நாமடைந் தாடுதுமே.

திருவேதிகுடி—திருவிருத்தம் 2

மடுக்களில் வாளைபாய வண்டின
மிரிந்த பொய்கைப்
பிடிக்களி றென்னத் தம்மிற்
பிணைபயின் றணைவ ரால்க
டொடுத்தநன் மாலை யேந்தித்
தொண்டர்கள் பரவி யேத்த
வடித்தடங் கண்ணி பாகர்
வலம்புரத் திருந்த வாறே.

திருவலம்புரம் - திருநேரிசை 2.

செங்கயல் சேல்கள் பாய்ந்து தேம்பழ மினிய நாடித்
தங்கயந்துறந்து போந்து தடம்பொய்கை யடைந்துநின் று
கொங்கையர் குடையுங் காலைக் கொழுங்கனி யழுங்கி
[ னுர
மங்கல மனையின் மிக்கார் வலம்புரத் தடிக ளாரே.

ஷை - 7.

மூரி முழங்கொலிநீ ராளுன் கண்டாய்
முத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
யின்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணு மலையுறையெம் மண்ணல் கண்டாய்
வாரி மதக்களிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.

திருமறைக்காடு - திருத்தாண்டகம் 5.

முக்கிமுன் வெகுண்டெ டுத்த
முடியுடை யரக்கர் கோனை
நக்கிருந் தூன்றிச் சென்னி
நாண்மதி வைத்த வெந்தை
அக்கர வாமை பூண்ட
வழகனர் கருத்தி னாலே
தெக்குநீர் திரைகள் மோதுந்
திருமறைக் காட னாரே.

திருமறைக்காடு - திருநேரிசை 2.

மழையின் செல்வம்.

அளியானை யண்ணிக்கு மான்பா றன்னை
வான்பயிரை யப்பயிரின் வாட்டந் தீர்க்குந்
துளியானை யயன்மாலுந் தேடிக் காணச்
சுடரானைத் துரிசறத் தொண்டு பட்டார்க்
கெளியானை யாவர்க்கு மரியான் றன்னை
யின்கரும்பின் றன்னுள்ளா லிருந்த தேறற்
றெளியானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே.

திருநாகேச்சரம் - திருத்தாண்டகம் 9.

தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலுஞ்
சந்திரனைக் கலைகவர்ந்து தவிர்த்தார் போலுஞ்
செக்கரொளி பவளவொளி மின்னின் சோதி
செழுஞ்சுடர்த்தீ நாயிறெனச் செய்யர் போலும்
மிக்கதிறன் மறையவரால் விளங்கு வேள்வி
மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாம்
கோக்கினிய கனிசிதறித் தேறல் பாயும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் — திருத்தாண்டகம் 4.

பெருகி யலைக்கின்ற வாறே போற்றி!
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி!
யுருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி!
யூனந் தவிர்க்கும் பிரானே போற்றி!
யருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி!
யாரு மிகழப் படாதாய் போற்றி!
கருகிப் பொழிகின்ற நீரே போற்றி!
கயிலை மலையானே போற்றி போற்றி!

திருக்கயிலாயம்-போற்றித் திருத்தாண்டகம் 8.

சொரிவிப் பார்மழை சூழ்கதிர் திங்களை
விரிவிப்பார் வெயிற் பட்ட விளங்கொளி
எரிவிப் பார்தணிப் பாரெப் பொருளையும்
பிரிவிப் பாரவர் பேரெயி லாளரே.

திருப்பேரெயில் — திருக்குறுந்தொகை 3.

வேத மோர் நான்கா யாறங்கமாகி
விரிகின்ற பொருட்கெல்லாம் வித்து மாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரி யாகிக்
குவலயங்கண் முழுதுமாய்க் கோண்ட லாகிக்
காதலால் வானவர்கள் போற்றி யென்று
கடிமலர்க ளவைதூவி யேத்த நின்ற
பாதியோர் மாதினனைப் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம் 2.

வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலா ராயிழை யாளொடு மமரிடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணலார் புறவணி திருமுது குன்றமே.

சம்பந்தர்.

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்திவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணுமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே.
பெரும்புன லண்ணுமலை பிறைசேரக்கட னஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்தமக் குறநோயடை யாவே.

சம்பந்தர்.

இழைக்கு மெழுத்துக் குயிரே யொத்தியா
லிலையே யொத்தியா லுனையே யொத்தியால்
குழைக்கும் பயிர்க்கோர் புயலே யொத்தியால்
அடியார் தமக்கோர் குடியே யொத்தியால்
மழைக்கும் நிகரொப் பனவன் றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டழைக்குங் கடலங் கரைமேல் மகோதை
யணியார் பொழிலஞ்சைக் களத்தப்பனே

சுந்தரர்.

இவ்வாறு குடிவளத்தாலும் நீர்வளத்தாலும் நிலம் சிறக்கு மெனினும், நிலத்திற்கும் வண்மையின்றேல் பாழ்க்கு நீர் பாய்ச்சலாகும். முன்னரே, உவர் களர் பாழ் முதலிய நிலங்கள் யாதொருபயனும் தாரா வென்பது கண்டோம். இனி இரண்டாம் வகுப்பு மாணுக்கரை யொக்க, மண் பயன்தர என்ன இலக்கணம் பொருந்தவேண்டும் என்பது ஆராய்வோம்:—

கருமையாகவும் பட்டுப்போல் பரிசத்திற்கு ஒவ்வ நிற்பதாயுமிருக்கின்ற நிலம் முதல்தரமான நிலமாம். இது ஆங்கிலத்தில் " கருப்புப் பஞ்சு விளை பூமி " எனப்படும் (Black Cotton Soil). இத்தகைய வயல் "கார் வயல்" எனத் தேவாரத்தில் காணப்படும்.

சேர்த்தானே தீவினை தேய்ந்தறத் தேவர்கள்
ஏத்தானே யேத்துநன் மாமுனி வர்க்கிடர்
காத்தானே கார்வயல் சூழ்திருக் காறுயில்
ஆர்த்தானே யென்பவர் மேல்வினை யடாவே.

சம்பந்தர்.



ஆயினும் நடுநாட்டிலும் தொண்டை நாட்டிலும் இவ்விதமண் கிடைப்பது அருமை. பெரும்பாலும் செம்மண் பூமியாயிருக்கும். இதுவும் விளைவுக்கு நல்ல மண்ணேயாம்.

காம்பாடு தோளுமையாள் காண நட்டங்
கலந்தாடல் புரிந்தவன்காண் கையில் வெய்ய
பாம்பாடப் படுதலையில் பலிகொள் வோன்காண்
பவளத்தின் பருவரைபோற் படிமத் தான்காண்
தாம்பாடு சினவிடையே பகடாக் கொண்ட
சங்கரன்காண் பொங்கரவக் கச்சை யோன்காண்
சேம்பாடு வயல்புடைசூழ் திருப்புத் தூரில்
திருத்தளியன் காணவனென் சிந்தை யானே.

திருப்புத்தூர் — திருத்தாண்டகம் 6.

சேரநாட்டுப் பிரதேசங்களில் மலைச்சாரல் பூமியே காணப்படும். இதனைச் "சாரல்" என்று தேவாரம் கூறும்.

மலையார் சாரன் மகவுடன்வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்
இலையார் சூல மேந்திய கையா னெயிலெய்த
சிலையான் மேய நன்னகர் போலுஞ் சிறுதொண்டீர்.
பெருந்தண் சாரல் வாழ்சிறை வண்டு பெடைபுல்கிக்
குருந்தம் மேறிச் செவ்வழி பாடுங் குற்றாலம்
இருந்துண்டேரு நின்றுண் சமணு மெடுத்தார்ப்ப
அருந்தண் மேய நன்னகர் போலு மடியீர்காள்!
மைம்மா நீலக் கண்ணியார் சாரன் மணிவாரிக்
கொய்ம்மா வேன லுண்கிளி யோப்புங் குற்றாலம்

சம்பந்தர்.

இதை ஆங்கிலத்தில் (Laterite Soil) லாடரைட் மண் என்பர். இதில் பொன்னும் *பலவித மணிகளும் நிறைந்திருக்கும். இதில், தினை சாமை முதலியன விளையும்:—

நெய்தல்நிலத்தை யொட்டியும் பயிர்நிலங்கள் சில இயற்கையில் உளவாதலால் அப்பரும் திருமறைக் காடு திருப்பதியைப் பாடும்போதும், அங்கு வயல் களைக் குறிக்கின்றார்.

நெய்த லாம்பல் நிறைவயல் சூழ்தரு
மெய்யி னார்வலங் கொண்மறைக் காடரோ
தையல் பாகங்கொண் டார்கவர் புன்சடை
பைதல் வெண்பிறை பாம்புடன் வைப்பதே.

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை 5.

இவ்வாறு பற்பலவிதமான பூமிகளையும் கைக் கொண்டு மாந்தர் பயிர்செய்து உலகத்திற்கும் தமக் கும் பலனை யேற்கவேண்டியதாயிருக்கின்றது. பயிர்த் தொழிலே எல்லா நற்குணங்களும் தரத்தக்க தொழி லாய் விளங்குவதுடன் நிரந்தரம் கடவுள் தியானத்தி லும் காலங்கழிக்கத்தக்க தொழிலாய் விளங்கும். இதனையே திருஞானசம்பந்தரும் விளக்குவது காண்க:—

நிறையுடை நெஞ்சுறு நீருறும் பூவுறும்
பறையுடை முழவுறும் பலியுறும் பாட்டுறும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலர் குற்றமே.

* மலை வாயசும்பு பசும்பொன் கொழித்திழியு மல்குசாரல்
குலைவாழைத் தீங்கனியு மாங்கனியுந் தேன்பிலிற்றுங்
[குறும்பலாவே

சம்பந்தர்.

# குறுந்தொகை

[838-வது பக்கத் தொடர்ச்சி]

கூழிக் கொற்றனர்] 276 [குறிஞ்சி

தோழியைக் குறையிரந்த தலைமகன் அவள் குறைமறு மற்பொருட்டுச் சொல்லியது.

பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்,
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும், மற்றிவள்
உருத்தெழு வன்முலை யொளிபெற வெழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்;
முறையுடை யரசன் செங்கோல் வையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்?
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் வழுங்க லூரே.

(உரை). மூங்கிலையொத்த தோள்களை உடைய இச்சிறு மகளுக்குப் பாவையைச்செய்து தந்தும், அதற்காகப் பஞ் சாய்க்கோரையுள்ள பள்ளங்களைத் தேடிப்பறித்துக் கொணர்ந்து கொடுத்தும், இவளன்பினைப்பெற்றுப் பின்பு நான் இவளது முகஞ்செய்தெழுந்த, சூதாடு கருவியை யொத்த முலைகள் அழகுபெறும்படி தொய்யிலெழுதியதை இவளைக் காத்து உடனிருந்தவர் எவரும் அறியார்; முறைப் படி ஆளும் செங்கோல்மன்னன் நாட்டில், அவளையே இஃது உண்மையன்றோ என யான் கேட்பின் என்ன வாகும்? நிச்சயமாக, இந்த ஆரவாரத்தோடு கூடிய ஊர் அறியாமையை உடையது; அளிக்கப்படத் தக்கதாமோ, ஆகாது. (நீங்கள் என் குறையை மறுப்பீராயின் மடலேறு வதே நான் செய்தற்குரிய தாகும்.)

பஞ்சாய் - பஞ்சாய்க்கோரை; இதனால் மகளிர் விளை யாட்டுப்பாவை புனைதல் வழக்கம். வன்முலை: 'வல்,' சூதா டுகாய். தொய்யில் - மகளிர் முலைமீது சந்தனக் குழம்பா லேனும் குங்குமச்சேற்றாலேனும் பல வடிவமாக எழுதிச் செய்யும் அலங்காரம்; 'தொய்யிலை' என்று இரண்டனுருபு விரித்து, 'அறியார்' என்னும் வினைக்குச் செயப்படுபொரு ளாக்குக.

ஓரிற்பிச்சையார்] 277 [பாலை

பிரிந்த தலைமகன் மீள்வதாகக் குறித்துச்சென்ற முன் பனிக்கால வரவு எப்பொழுதென்று தெருவிற்செல்லும் அறிவாளரொருவரைத் தோழி வினவியது.

ஆசில் தெருவி னாயில் வியன்கடைச்
செந்நெ லமலை வெண்மை வெள்ளிழு
தோரிற் பிச்சை யார மாந்தி
அற்சிரை வெய்ய வெப்பத் தண்ணீர்ச்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே;
'மின்னிடை நடுங்குங் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவ தென்றி,
அக்கால் வருவரெங் காத லோரே.

(உரை). மின்னலைப்போல நடுங்கும் இடையையுடைய வராகிய மகளிர் (உள்ளமும் உடலும்) நடுங்குவதற்குக்காரண மான வாடையோடு கூடியதும், மழைக்காலத்துக்குப் பிந்தி யதுமான கூதிர்க்காலம் எப்பொழுது வருமென்று நீ

சொல்லுகின்றனையோ அப்பொழுது தான் (சேணகன்ற) எமதுகாதலர் வருவார். இதனை எனக்குச் சொன்னதற்காக இந்தக் குற்றமற்ற தெருவில் அந்த வீட்டின் அகன்ற முற்றத்தில் செந்நெற் சோற்றுத்திரளொடு வெண்மையான வெண்ணெயையும் (பல வீடுகளிலுஞ் சென்று பிச்சை ஏற்காது) ஒரு வீட்டிலேயே பெற்று வயிறார உண்டு, மேல் முன்பனிக்காலத்தில் விரும்பப்படும் வெந்நீரையும், வாங்கி வைத்துக்கொள்ளுங் கரகம் நிறையப் பெறுவாய்நீ.

ஆயில் - அ + இல், என்பது ‘ஆயிடை’ என்றாற்போல வந்தது. ‘ஆயில்’ என்று சுட்டியது தலைமகள் வருந்தித் தனித்துறையும் இல்லத்தை. வெள்ளிழுது-வெண்ணெய்: இழுது-நெய். அற்சிரை - அற்சிரம், அச்சிரம்; முன்பனிக்காலமாகிய மார்கழியும் தைத்திங்களும். மின்னிடை - அன்மொழித்தொகை. வாடை - (ஆகுபெயர்) வாடைக்காற்றோடு கூடிய கூதிர்ப்பருவமாகிய ஐப்பசி கார்த்திகை மாதங்கள். ‘எங்காதலர்’ என்றது தனக்குந் தலைமகளுக்குமுள்ள ஒற்றுமை நயத்தால்.

இதைத் தலைமகள் கூற்றாக்கி, “எங்காதலர் வருங்காலத்தை நீ தெரிந்துரைப்பையானால், ஓரில்லிலேயே வேண்டிய பிச்சையைப் பெற்று, வயிறார மாந்தித் தண்ணீரைப் பெறுவாயாக” என்று கூறியதாகக் கொள்க.

---

பேரிசாத்தனார்] 278 [முல்லை

தலைமகனது பிரிவிடை ஆற்றாது வருந்திய தலைமகள் தன்னை வற்புறுத்திய தோழிக்குச் சொல்லியது.

உறாவளி யுளரிய அந்தளிர் மாஅத்து
முறிகண் டன்ன மெல்லென் சீறடிச்
சிறுபசும் பாவையு மெம்மு முள்ளார்
கொடியர், வாழி தோழி, கடுவன்
ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய காடிறந் தோரே.

(உரை). தோழீ, தென்றற்காற்று அசைத்திட்ட மாமரத்தின் அழகிய தளிரையொத்த மெல்லிய சிறிய அடிகளையுடைய சிறிய பச்சைக்குழந்தையாகிய என்மகளையும் எம்மையும் நினைந்திலர், ஆண்குரங்குகள் மரக்கிளையின் மேலிருந்து முதிர்ந்த பழங்களை உதிர்க்க உதிர்க்கக் கீழிருந்து அவற்றை வாங்கி வாங்கி உண்ணுங் குட்டிகளோடு கூடிய பெண்குரங்குகளையுடைய காட்டைக் கடந்து சென்றவராகிய கொடியவர்.

‘அந்தளிர்’ என்பதை மாமரத்துக்கு இயற்கையடையாகவேனும், ‘அந்தளிர்முறி’ யென இருபெய ரொட்டாகவேனுங் கொள்க. பாவை - மகள். ‘சிறு பசும்பாவை’ - சிறு குழந்தை. ‘பாவை’ என்பதற்குக் குராமலர்ப்பாவை என்றுரைப்பாரும் உளர். ‘பார்ப்பு’ என்னும் பெயர் குரங்குக் குட்டிக்கு உரித்தாதலை,

கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப - (மரபியல் . 13)
மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையு மன்ன அப்பா லான - (ஷை - 14)

என்ற தொல்காப்பியச் சூத்திரங்களால் அறிக.

இறைச்சி:—‘கடுவன்.........பார்ப்புடைய மந்தியகாடு’ என்ற குறிப்பால் ‘அதனைக்கண்டாயினும் தலைமகன் பரிந்து மீண்டு தனக்குந் தன்மகளுக்கும் இனியன தந்து இன்புறச் செய்திலனே என்று அவனது கொடுமையை நினைந்து நொந்து கூறியதாம்.

---

மதுரை மருதனிளநாகனார்] 279 [முல்லை

இதுவும் அது.

திரிமருப் பெருமை யிருணிற மையான்
பருமிடறு நியாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியம்புதொ றிசைக்கும்
இதுபொழு தாகவும் வாரார் கொல்லோ,
மழைகெழு மறைந்த மாயிருந் துறுகல்
துகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்
இரும்பல் குன்றம் போக்கித்
திருந்திறைப் பணைத்தோள் உள்ளா தோரே.

(உரை). வருத்தத்தைச் செய்யும் நடுராத்திரியில் கருநிறத்த எருமையின் பருத்த கழுத்திற்கட்டிய அகன்றவாயையும், தெளிவான ஓசையையுமுடையமணி ஒலிக்கும்போதெல்லாம் திருகியகொம்பையுடைய எருமைக்கடா கத்தும் இந்தப் பொழுதினும், மேகங்கள் பொருந்தலால் மறைவுற்ற பெரிய கரிய பாறைகள் தூசிபடிந்த யானையைப்போல விளங்கித் தோன்றும் பெரியகுன்றுகள் பலவற்றைக் கடந்து சென்று, திருத்தமான சந்துவாயையுடைய மூங்கிலைப்போன்ற எனது தோள்களை நினையாத காதலர் வரமாட்டாரோ?

மையான் - காரான், பெண்ணெருமை. கெழு - (முதனிலைத் தொழிற்பெயர்) கெழுமுதல்; கெழுமுதலால் எனமூன்றனுருபுவிரிக்க. போக்கி - பின்னாகும்படிசெய்து சென்று. இறை - சந்துவாய், பூட்டுவாய்; the joint. ‘வருமிடறு’ என்றும் பாடம்.

---

நக்கீரர்] 280 [குறிஞ்சி

முதலில் இடித்துரைத்துப் பின்னர்த் தனதாற்றாமை கண்டு பரிவுற்று, ‘நின்னை இவ்வாறு மதிமயக்கிய பெண் யார், எத்தகையினள்?’ என்று தன்னைக்கேட்ட பாங்கனுக்குத் தலைமகன் கூறியது.

கேளிர், வாழியோ, கேளிர்; நாளுமென்
நெஞ்சுபிணிக் கொண்ட வஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே.

(உரை). அன்புடையீர் நான் சொல்வதைக்கேளும். கண்ட நாள்முதல் எனதுள்ளத்தைப் பிணித்துத் தன் வயமாக்கிக்கொண்ட அழகிய சிலவாகிய கூந்தலையும் பெரிய தோள்களையுமுடைய அச்சிறுமகளின் சிறிய மெல்லிய மார்பைத் தழுவதல் ஒருநாளைக்கேனும் எனக்கு இயையுமாயின், அதன்பிறகு அரைநாளளவும் உயிர்வாழ்ந்திருத்தலை நான் விரும்பேன்.

‘கேளிர்’ - முதலாவது, நட்பினரே, என்று பொருள்படும் அண்மை விளிப்பெயர்; இரண்டாவது, ‘இர்’ ஈற்று முன்னிலைப்பன்மை வினைமுற்று. புணரின் - இசையுமாயின், கூடுமாயின். ‘ஒருநாள் புணரப்புணரின்’ என்றது முன்னிரண்டு நாள் (இயற்கைக் கூட்டத்தினும், இடந்தலைப்பாட்டினும்) தான் அவளைக் கூடப்பெற்றதைப் பாங்கனிடம் மறைத்துக் கூறியது.

---

குடவாயிற் கீரத்தனார்] 281 [பாலை

தலைவனது பிரிவைத் தோழியாலுணர்ந்து ஆற்றாது வருந்திய தலைமகள், ‘அவர் போரிடை மாற்றரசரைவென்று வாகை சூடிவருவர்; நீ வருந்தாதே” என்று சொல்லித் தன்னைத் தேற்றிய தோழிக்கு, அவ்வாறாயின் ஆற்றியிருப்பல் என்பதுபடச் சொல்லியது.

வெண்மணற் பொதுளிய பைங்காற் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண்டோ
டத்த வேம்பி னமலை வான்பூச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடி,
குன்றுதலை மணந்த கானம்
சென்றனர் கொல்லோ, சேயிழை, நமரே.

(உரை). நல்ல ஆபரணங்களை அணிந்தவளே, நந் தலைவர், கடற்கரையில் வெண்மையான மணலிடத்து நிறைந்துள்ள பசிய அடிப்பக்கத்தோடுகூடிய கூர்மையான மட்டைகளையுடைய திரண்ட பனையின் குடுமிபோன்ற வெண்மையான குருத்தோலையையும், சுரத்தினிடத்துள்ள வேம்பின் கொத்தாய்ப்பூத்த சிறந்த பூவையும் சுருள்பொருந்திய தமது மயிர்த்தலையில் சூடும்பொருட்டுக் குன்றுகள் ஒன்றோடொன்று சேர்ந்து நெருங்கிய காட்டின்வழியே சென்றிட்டார் கொல்லோ? (அவ்வாறாயின் நான் வருந்தலேன்.)

கருக்கு - கூர்மையான பற்களையுடைய மட்டை. போந்தை - பனைமரம். தோடு - இலை. அத்தம் - அருஞ்சுரம். அமலை - திரள், தொகுதி. சுரி - மயிர்ச்சுருள். உளை - ஆண்பாலார் தலைமயிர். சூடி - சூட, சூடும்பொருட்டு. தலைமணந்த - மணந்த, கலந்த, கூடிய. சேயிழை - அன்மொழித்தொகை; விளி.

சோழமன்னருக்குத் துணையாகப் போருக்குச் சென்று மாற்றரசராகிய சேரபாண்டியர்களின் சேனையை வென்று, அவருக்குரிய பனைமாலையையும் வேப்பமாலையையும் சூடும்பொருட்டுத் தலைவன் சென்றான் என்பதைப் ‘போந்தை வெண்டோடு வேம்பின்வான்பூச் சூடச்சென்றனர் நமர்’ என்றது குறிக்கும். அன்றிச் ‘சூடி’ என்பதைத்திரிக்காது அவ்வாறே கொண்டு, தலைமகன் எற்கனவே பலபோரில் சேரபாண்டியர் சேனையைவென்று அவர்க்குரிய மாலையைச் சூடினவன் என்றதாகவுங் கொள்ளலாம். இதனால் இப்பாட்டைப்பாடிய கீரத்தனார் சோழமன்னரிடத்து அன்பும்அபிமானமும் உடையவர் என்பது போதரும்.

---

நாகம் போத்தனார்] 282 [முல்லை

தலைவனது பிரிவிடை ஆற்றாது வருந்திய தலைவியைத் தோழி ‘குறித்தபடி கார்காலத்தில் உன் காதலர் வாராமலிரார்’ என்று கூறித் தேற்றியது.

செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கௌவை நாற்றின் காரிரு ளோரிலை
நௌவி நாண்மறி கௌவிக் கடன்கழிக்குங்
காரெதிர் தண்புனங் காணிற் கைவளை
நீர்திகழ் சிலம்பி னோராங் கவிந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவீ போலக்
சோர்குவ வல என்பர்கொல் அவரே.

(உரை). முதிரும் பருவத்தையுற்ற வரகுவிளைந்த மேட்டு நிலத்தில் முளைத்த எள்ளுச்செடியின் கரிய ஒப்பற்ற இலையை மானின் புனிற்றிளங்கன்று கடித்துத் தனது பசியைத் தீர்த்துக்கொள்ளுங் கடமையைக் கழிக்குங் கார்காலத்தையேற்ற குளிர்ந்த புனங்களையுடைய முல்லையங் கானத்தைக்கண்டால் உனதுகைவளைகள், மழைநீர் நிறைந்த மலையில் வெண்கூதாளத்தின் அழகிய உட்டுளையையுடைய காம்பினின்று புதுமலர் வாடிக் கழன்றுகுந்து ஒருங்கே கிடக்கும் அவிந்தபூவைப் போலச் சோர்ந்து விழுவன அல்ல’ என்று அவர் எண்ணுவாரோ? (ஒருகாலும் அவ்வாறெண்ணார்.)

சுவல் - மேட்டுநிலம். கௌவை - கவ்வை, எள்ளின் இளங்காய்; இங்கு ஆகுபெயராய் எட்செடியைக்குறித்து நின்றது. நாறு - முளைபயிர். காரிருள் - இருள்போலக் கறுத்த. நௌவி - நவ்வி, மான். நாள்மறி - புதியகன்று; பிறந்து நாளாகாத கன்று. கடன் - பசியைத் தீர்த்துக் கொள்ளுங் கடன். ஆர் - ஆர்க்கு, பொருத்துவாயாகிய காம்பு. ஆர்கழல்பு’ (அகம், 889). கழல்பு உகு - கழன்று உகுந்த. காம்பினின்று கழன்று கீழே பலவுடன் கிடக்குங் கூதாளமலர்கள், கையினின்று சோர்ந்து விழுந்த வளைகளுக்குவமை. வரகும் எள்ளும் மானும் முல்லைக்குரிய கருப்பொருள். கார்காலத்தில் வரகுமுதிர்தலும், எள்ளுச் செடிகள் ஓரிலை ஈரிலையாக முளைத்தலும், மழையாற் பசியை மறந்த மான்கள் எள்ளினிலையாகிய அற்பவுணவைக் கொண்டு திருப்திபடைதலும் இயல்பு. இவற்றை,

சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகின் சிறுகுறல் புலர,
* * * *
பெருங்கவின் பெற்ற சிறுதலை நௌவி
மடக்கட் பிணையொடு மறுகுவன வுகள
* * * *
முல்லை சான்ற புறவு... (மதுரைக். 271 - 284)

என்ற பத்துப்பாட்டடிகளானும்,

மாபாசி மறுப்பக் கார்தொடங் கின்றே- (497)

என்ற ஐங்குறுநூற்றுப் பாட்டடியானுந் தேர்க.

---

பாலைபாடிய பெருங்கடுங்கோ]283 [பாலை

தலைமகனது பொருள்வயிற் பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு, ‘நான் அவர் பிரிவால் வருந்துகின்றேன் அல்லேன், அவர் சென்ற கானத்தின் கொடுமையை நினைந்தே வருந்துகின்றேன்’ என்று தலைமகள்சொல்லியது.

‘உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்;
இல்லோர் வாழ்க்கை இரவினு மிளி’வெனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர், வாழி தோழி, என்றும்
கூற்றத் தன்ன கொலைவேன் மறவர்
ஆற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீரி லாறே.

(உரை). ‘உள்ள பொருளையே செலவிட்டழிப்போர் உள்ளவரென்று கருதப்படார், பொருளில்லாதவர் வாழ்க்கை யாசித்தலைக்காட்டிலும் இழிந்தது’ என்று மூதறிஞர் கூறிய கட்டுரைகளை எனக்குத் தெளியக்காட்டி, இளைப்பாறத் தங்கியிருந்துசெல்லும் வழிப்போக்கரை யமனைப்போன்ற கொல்லும் வேலையுடைய மறவர் கொன்ற உடலினெழும் முடைநாற்றத்தைப் பருந்து ஓர்ந்து பார்த்துத் தங்கியிருக்கும் நெடிய பழைமையான கொடுமைபொருந்திய சுரமானநீரற்ற வழியிலே சென்றிட்டார், தோழீ. (அவருக்கு யாதுதீங்கு உண்டாகுமோ, என்று நினைத்து கவல்கின்றேன் நான்.)

இரவு-இரத்தல் (யாசித்தல்); ‘இறவினும்’ இறத்தலினும் என்றுமொரு பாடம். வன்மை-கட்டுரை, உறுதிமொழி. ஆற்றிருந்து - (விகாரம்) ஆற்றியிருந்து. அல்கி-தங்கி. மூதிடை - முதுமையிடம்; முதுமை - (ஆகுபெயர்) பழைமையான கொடுமை. இடைய - இடத்தையுடைய: இடை - இடம். ‘இடை’ என்பதை முதனிலைத் தொழிற்பெயராக, ‘இடைதல்’ வருந்துதல் என்று கொள்ளலுமொன்று.

---

மிளைவேடித்தனார்] 284 [குறிஞ்சி

வரையாது ஒழுகுந்தலைமகன் வந்து சிறைப்புறத்தானாகத் தோழி அவனுக்கு உரைப்பாளாய்த் தலைமகளுக்குச் சொல்லுவாள் போன்று சொல்லியது.

பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் துறுகல் மீமிசைப் பலவுடன்
ஒண்செங் காந்தள் அவிழு நாடன்
அறவ னாயினும், அல்ல னாயினும்
நம்மே சுவரோ, தம்மிலர் கொல்லோ,
வரையிற் றாழ்ந்த வால்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையி னிழிதரும்
இன்னா திருந்தவிச் சிறுகுடி யோரே.

(உரை). போர்செய்து செம்புண்ணுற்ற யானையின் புள்ளிகளையுடைய முகத்தையொப்பக் கற்பாறையின் உச்சியில் ஒள்ளிய செங்காந்தள் மலர்கள் பல பூத்த [illegible]

அறத்தின் வழியில் ஒழுகுபவனாயினும், அல்லனாயினும், வரையினின்று விழும் நல்ல வெள்ளிய அருவி பயனற்ற இலையால் வேய்ந்த குடிசைகளிடத்து இழியும் நீங்கினை யுடைய இச்சிற்றூரிலுள்ள சிறுகுடியினர், திண்ணமாக, அவனிருக்க அவனையே ஏசுவாரேயன்றி நம்மை ஏசுவாரோ? (ஒருகாலும் ஏசார்.)

பல செங்காந்தள்மலர் மலர்ந்த உச்சியையுடைய பாறை, பல செம்புண்களையுடையமுகத்து யானைக்கு உவமை. மன்ற - நிச்சயமாக, திண்ணமாக; இதை 'நம்மேசுவரோ?' என்பதனோடு சேர்க்க. அறவன் - முறைப்படி ஒருத்தியை மணந்துகொண்டு இற்கண்ணமர்ந்து இல்லறத்தை நடத்தும் நல்லொழுக்கத்தினன். நம் - நம்மை. தம்இலரோ - (பழிக்கப்படுவதற்குத்) தாம் இலரோ? கொன் - பயனற்ற.

இறைச்சி:—வரையினிழிந்த அருவி குரம்பைமீதிறங்கி அதைச் சிதைத்துவிடுவதைப்போல, மலைமேற் பொழிலகத்து நிகழ்ந்த தலைமகனது களவுப்புணர்ச்சி, வரைவு நீடித்தவழி, குறிச்சியெங்கும் வெளிப்பட்டுப் பரந்து அலராகித் தனது குடிக்கும் தமர்க்கும் பழியைப் பயக்குமென்று குறிப்பித்து அவனை வரைவுகடாவியதாம்.

---

பூதத் தேவனார்] 285 [பாலை

நெடுநாட் சேணகன்ற தலைமகன் குறித்த பருவத்தும் வாராமையால் மிகவும் ஆற்றாது வருந்தி வேறுபட்ட தலைமகள் தன்னை வற்புறுத்தித் தேற்றிய தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது.

> வைகா வைகல் வைகவும் வாரார் ;
> எல்லா வெல்லை யெல்லவுந் தோன்றார் ;
> யாண்டுளர் கொல்லோ, தோழி? ஈண்டிவர்
> சொல்லிய பருவமோ இதுவே; பல்லூழ்
> புன்புறப் பெடையொடு பயிரி யின்புற,
> இமைக்கண் ஏதா கின்றோ? அமைத்தலை
> ஊனசைஇ யொருபருந் திருந்துவக்கும்
> வானுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

(உரை). தோழீ, இமைப்பொழுதிற்குள் ஒருவருக்கு யாது நேருமோ? (அதை எவருமறிந்திலர்.) காதலர் இங்கே வருவதாகக் குறித்துச்சென்ற கார்காலம் இதுவே. புன்மையான சேவற்புறா பன்முறைப் பெடையைக் கூவியழைத்து, அதனுடன் கூடி இன்புறாநிற்கப் பக்கத்தில் மூங்கிலின் மீது ஊனுகிய வுணவை விரும்பிப் பருந்தொன்று இருந்து களிக்கும், வானத்தளவு உயர்ந்த விளக்கமுற்ற மலையைக் கடந்து சென்றவராகிய நங்காதலர், இருள் தங்காத பகல் இருளுறும் இராக்காலம் வந்தபோதும் வந்திலர்; ஒளியற்ற இராக்காலம் ஒளிபெறும் பகற்காலம் வந்தபோதும் தோன்றிலர். அவர் எவ்விடத்தில் இருக்கின்றனரோ, அறியேன்.

வைகா,-வைகவும்-'இருள்' என்று ஒரெழுவாய் வருவிக்க. எல்லா, எல்லவும் - 'எல்' என்னும் பெயரடியாக வந்த பெயரெச்ச வினையெச்சங்கள். எல்லா - எல்லாத, ஒளிசெய்யாத. எல்ல - ஒளிசெய்ய. வைகல், எல்லை - நாள்.

> ஏல்வையே, திவசம், வைகல்,
> அல்கலே, தினமே, எல்லை, ஆனியம் பகலே நாளாம்

என்பது சூடாமணி நிகண்டு (முதலாவது, தேவப்பெயர்ப் பகுதி, 82). இங்கே இவை ஆகுபெயராய் நாளின் ஒரு பகுதியைக் குறித்துவந்து, 'எல்லா' என்ற விசேடணத்தால், 'எல்லை' என்பது இரவென்றும், ஏனைய 'வைகல்' என்பது 'பகல்' என்றுங் கொள்ளப்பட்டது ; இப்பொருட்கேற்பவும், பிற்கூறிய 'எல்லா எல்லை எல்லவும்' என்ற கருத்துக்கிணங்கவும், 'வைகா', 'வைக' என்பவற்றுக்கு 'இருள்' என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது. பருவமோ இது - சேவற்புறாப் பெடையைக் கூவியழைத்துக் கூடி இன்புறும் என்றமையால் தலைவன் பிரிந்தகன்ற காலம் இளவேனிற் காலமென்றும், மீள்வதாகக் குறித்த காலம் கார்காலம் என்றுங் கொண்டாம். பல்லூழ் - பலகால், பன்முறை; 'பல்லூழ் நினைப்பினும்' (374), 'பல்லூழ்மறுகி' (390) என்று ஐங்குறுநூற்றினும், 'பல்லூழ் சேயிழை தெளிர்ப்பக் கவைஇ' (51) என்று அகத்தினும் வந்தமை காண்க. புற - 'புறா' என்பதின் இறுதி ஆகாரம் குறுகிவந்தது, செய்யுளாதலின். இவ்வாறுதலை

> குறியத னிறுதிச் சினைகெட, உகரம்
> அறிய வருதல் செய்யுளு ளுரித்தே—(எழுத்து-234)

என்ற தொல்காப்பியச்சூத்திரவுரையாலும், இவ்விதியைப் பின்னர்த் தெளிவுற விளக்கிய,

> குறியதன் கீழாக் குறுகலும், அதனோ
> டுகர மேற்றலும், இயல்புமாம் தூக்கின்—(172)

என்ற நன்னூற்சூத்திரத்தாலும் அறிக.

'இமைக்கண் ஏதாகின்றோ?' என்ற பொதுதர்மத்தால், ஆணும் பெண்ணுமாய்க்கூடி இன்புற்றிருக்கும் புறாக்களைக் கொன்றுண்ண அயலிலே பருந்து உவந்திருந்தாற்போல மருவி மகிழ்ந்திருக்குங் காதலரை உயிர்கொள்ளக் கூற்றுவன் காத்திருக்கின்றான்; ஆதலால் ஒரு கணமேனும் பிரிந்துறைதல் தகாதென்றாளாம்.

'வைகா...வாரார்; எல்லா...தோன்றார்' என்றது ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் சேணகன்ற தலைவர் வருவாரென்று எதிர்பார்த்தும் வரவில்லையே என்று தலைமகள் இரங்கியதாம்.

---

எயிற்றியனார்] 286 [குறிஞ்சி

பாங்கியைக் குறையிரந்து பின்னின்ற தலைமகன் அவள் குறைமறுமற்பொருட்டுச் சொல்லியது.

> உள்ளிக் காண்பேன் போல்வென், முள்ளெயிற்
> றமிர்த மூறுஞ் செவ்வாய்க் கமழகில்
> ஆர நாறும் அறல்போற் கூந்தல்
> பேரமர் மழைக்கண் மடந்தை
> மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே.

(உரை). கூரிய பற்களிடத்து அமிர்தம் போன்ற இன்னீர் ஊறுஞ் செவந்த வாயையும், வாசனை பொருந்திய அகில் சந்தனங்களின் புகை கமழும், கருமணலைப்போன்ற கூந்தலையும், பெரிய அமர்த்த குளிர்ந்த கண்களையும் உடைய மடந்தையின் புன்சிரிப்பையும், செருக்கிய நோக்கையும், இனி நான் (என் கண்ணாற் காணப்பெறுதலின்றி) மனத்தால் நினைத்தே பார்ப்பேன் போலும்.

மூரல் - பல். முறுவல் - சிரிப்பு, மதைஇய - செருக்கிய; வனப்பு வாய்ந்த என்றுமாம். இது 'மத' வென்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம்; 'மத' என்னு முரிச்சொல் மடன், வலி, உள்ளமிகுதி, வனப்பாகிய நான்கையுங் குறிக்கும்.

> மதவே மடனும் வலியுமாகும்-(தொல்-சொல்,உரி, 81)
> மிகுதியும் வனப்பும் ஆகலு முரித்தே - (ஷை - 82)

பாங்கி தன்குறையை மறுப்பின் தான் மடலேறத் துணிந்ததாகவும், ஆனால் அதற்குத் தலைமகளின் உருவத்தைக் கிழியில் எழுதவேண்டுமாதலின், அவளுடைய முள்ளெயிற்றையும், செவ்வாயையும், கருங்கூந்தலையும், மழைக்கண்ணையுந் தீட்டல் ஒருவாறமையினும் மூரன்முறுவலையும், மதத்த நோக்கையும் வரைதலாகாமையின் தான் மடலேறுவது எங்ஙன்? எனத் தலைமகன் பாங்கிக்குச் சொல்லியது.

இது, தான் கண்ட பெண் எவ்வியல்பினள் என்று தன்னை வினவிய பாங்கனுக்குத் தலைமகன் பதிலுரைத்ததுமாம்.

---

கச்சிப்பேட்டு நன்னாகையார்] 287 [முல்லை

தலைமகனது பிரிவு நீட்டித்தவழிக் 'காதலர் நம்மைத் துறந்தார் கொல்லோ; இனி வாரார் கொல்லோ' என்று கவன்ற தலைவிக்கு 'அவர் குறித்துச்சென்ற பருவம் இது; இன்னே வருவார்' என்று சொல்லித் தோழி தேற்றியது.



> அம்ம, வாழி தோழி ; காதலர்
> இன்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ,
> முந்நாட் டிங்கள் நிறைபொறுத் தசைஇ
> ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
> கடுஞ்சூல் மகளிர் போலநீர் கொண்டு
> விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்
> செழும்பல் குன்ற நோக்கிப்
> பெருங்கலி வானம் ஏர்தரு பொழுதே.

(உரை). நங்காய், பெரிய முழக்கோடு கூடிய மேகம் கடலிற் சென்று, நீரை (நிறைய) முகந்து சுமந்து முந்நாட் பிறையைப்போல முதிராத இளங்கருவைத்தாங்கித் தளர்ந்து வருந்தும் நீங்காத பசும்புளிவேட்கையையுடைய முதற்சூலுற்ற மகளிரைப்போல, வானத்திலெழமாட்டாது செழுமையான (தூரத்திலுள்ள பல குன்றுகளை) நோக்கியெழுங் கார்கால மிதனைக் கண்டும், நமது காதலர் நம்மை இவ்வாறு துறப்பரோ? (துறவார்; தவறாமல் கடிதுவந்திடுவோர்; நீ வருந்தாதே.)

இன்னே - இவ்வாறு. முந்நாட்டிங்கள் - (உவமையாகுபெயர்) உருவம் நிரம்பவளராத கரு. நிறை - நிற்கும், தங்கும் கரு. அசைஇ - வருந்தி. ஒதுங்கல் செல்லா - ஒதுங்காத, நீங்காத. பசும்புளி வேட்கை - சூலுற்ற மகளிருக்குப் புளிப்பான பொருள்களிடத்தும், வேறு பல பொருள்களிடத்தும் உண்டாகும் புதிய விருப்பம். கடுஞ்சூல் - முதற்சூல், தலைக்கருப்பம். இவர்கல்லாது. எழமாட்டாது. ஏர்தரு - எழுதரு, எழுகின்ற; ஏர்தல்- எழுதல். 'ஏர்' என்னும் வினைமுதல் 'தரு' வென்னுந் துணைவினை கொண்டு, ஒருசொன்னீர்மைத்தாயது. நேரே உயரமான விசும்பில் ஏறமாட்டாது, சென்று தங்குமிடமாகிய மலைகளை நோக்கி மேகங்கள் எழுந்தன என்க.

பொழுது கண்டும் இன்னே துறக்குவர் கொல்லோஎன்று மாற்றிக் கூட்டி முடிக்க.

---

கபிலர்] 288 [குறிஞ்சி

வரையாது, களவொழுக்கின் றலைநின்ற தலைமகன் சிறைப்புறத்தானாதலை உணர்ந்து, 'நம்பெருமான் நம்மிடத் தன்பிலன்; நமக்குளவாம் பழியையும் பருவரலையும் பார்த்திலன்; என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

> கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
> குரங்கொருங் கிருக்கும் பெருங்கன் னாடன்
> இனியன்; ஆக லினினைத் தியன்ற
> இன்னா மையினும் இனிதோ
> இனிதெனப் படூஉம் புத்தே ணாடே?

(உரை). மிளகுக்கொடிவளர்ந்துள்ள மலைச்சாரலில் (கறிப்புமிக்க) மிளகைத்தின்னாது தளிர்களைத் தின்னுங் குரங்குகள் கூடியிருக்கும் பெருமலைநாடன் நமக்கு மிகவும் இனியனே. ஆதலால் அவனுடன் கூடிய களவுப்புணர்ச்சியால் நாம்படுந் துன்பத்தினும், இனியதென்று சொல்லப்படும் தேவருலகத்தின்பம் இனியதொன்றாகுமோ?

கறி - மிளகுக் கொடி. புத்தேள் நாடு - துறக்கநாடு.

இறைச்சி:—உண்ணத்தகாத மிளகைத் தவிர்த்து உண்ணத்தக்க தளிர்களைத்தின்னும் குரங்குகளின் குணத்தைக் கண்டுவைத்தும் இவ்வொழுக்கம் தக்கது இது தகாதென்றுணரும் 'ஓர்ப்பு' என்னுங் குணமிலன் தலைவன், என்று குறிப்பித்தவாறாம்.

---

பெருங்கண்ணனார்] 289 [முல்லை

குறித்த கார்ப்பருவ வரவின்கண் தலைமகளின் வேறுபாடு கண்டு அவள் பிரிவாற்றாது வருந்தினளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் 'நானுற்ற வருத்தம் அவர் வாராமையைக் குறித்தன்று; இவ்வூரார் அவரைக் கொடியரெனக் கூறும் வசைமொழியைக்கேட்டேயாம்' என்று சொல்லியது.

> வளர்பிறை போல வழிவழி பெருகி
> இறைவளை நெகிழ்த்த எவ்வ நோயொடு
> குழைபிசைந் தனையே மாகிச் சாஅய்
> உழையா னமையின் உழப்ப தன்றியும்,
> மழையும், தோழி, மான்றுபட் டன்றே ;
> பட்ட மாரி படாஅக் கண்ணோம்
> அவர்திறத் திரங்கும் நம்மினும்
> நந்திறத் திரங்குமிவ் வழுங்க லூரே.

(உரை). அவர் நமக்கு நெருங்கிய கேண்மையர் ஆனமையால் வளரும் பிறையைப்போல நாளுக்குநாள் அதிகப்பட்டுக் கைவளைகளை நெகிழச்செய்த காமநோயால் பிசைந்த சேற்றைப்போலக் குழைந்து மெலிந்து நாம் வருந்துவதுமன்றி, தோழீ, மழையும் மதிமயங்குமாறு பெய்யலுற்றது. தோன்றிய கண்ணீர்மழை அடங்காத கண்ணை உடையேமாய் அவரைப்பற்றி வருந்தும் நம்மைக் காட்டிலும் நம்மைக்குறித்து வருந்தாநிற்கும் இவ்வாரவாரத்தோடு கூடிய ஊர்.

இறை - கை. எவ்வம் - துயரம்; வருத்தம்; எவ்வநோய்-மிக்க துன்பத்தை விளைக்கும்நோய்; மருந்தொன்றானுந் தீராமையாகிய குற்றத்தையுடைய நோய், என்பர் பரிமேலழகர்; (திருக்குறள், 1241, உரை) குழை - (1) சேறு; (2) தளிர்: தளிர்களை நன்றாய்க் கசக்கிப் பிசைந்தாற்போல, என்றுமாம். உழை - (ஆகுபெயர்) இடைவிடாது பக்கத்திருப்போர்; நெருங்கிய கேள்வர். மான்று பட்டன்று - மான்றுபட்டது, மயங்கியது; மனக்கலக்க முற்றது; மழை பிறரை மயங்கச் செய்ததைத் தான்மயங்கியதாகத் தன்வினையாகக் கூறியது. மாரி - (உவமையாகுபெயர்) கண்ணீர் போலப் பொழியும் மழை.

---

கல்பொரு சிறுநுரையார்] 290 [நெய்தல்

'ஆற்றியிரு, ஆற்றியிரு' என்று தன்னை வற்புறுத்துந் தோழிக்கு எதிரழிந்து தலைமகள் சொல்லியது.

> 'காமந் தாங்குமதி' என்போர் தாமஃ
> தறியலர் கொல்லோ! அனைமது கையர்கொல்!
> யாமெங் காதலர்க் காணே மாயிற்
> செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
> கல்பொரு சிறுநுரை போல
> மெல்ல மெல்ல இல்லா குதுமே.

(உரை). 'காமத்தைப் பொறுத்திரு' என்று பிறருக்கு உரைப்போர் அஃதித்தன்மைத்து என்பதைத் தாம்அறியாதவரோ, அல்லது (அதைப்பொறுத்தற்கு வேண்டிய) அத்தகைய வல்லமை உடையவரோ; (யான் அறியேன்). யாம், பிரிந்த வெங் காதலரை வரக்காணேமாயின் பொருந்திய துன்பம் மிகுந்த உள்ளத்தோடு, கல்லில் மோதும் அலையின் சிறு நுரையைப்போலக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சிதைந்து இறுதியில் (உயிர்) இல்லாதவர் ஆய்விடுவேம்.

அனை - அனைய, அவ்வளவு. மதுகை - வலிமை. கொல் - 'கொல்லோ' என்று இதற்கும் ஓகாரம் விரிக்க. பெருநீர் - கடல்; இங்குக் கடலின் அலை. இல்லாகுதும்- இல்லையாகுதும்.

---

கபிலர்] 291 [குறிஞ்சி

'உன்னை இவ்வாறு காமத்தால் நிறையழியச்செய்த மங்கை எவ்விடத்தினள், எவ்வியல்பினள்?' என்று தன்னை வினவிய பாங்கற்குத் தலைமகன் உரைத்தது.

> சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
> படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
> இசையி னிசையா யின்பா ணித்தே ;
> கிளியவள் விளியென விழலொல் லாவே

அதுபுலந் தழுத கண்ணே சாரற்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றனவே.

(உரை). மரங்களையுஞ் செடிகளையும் சுட்டழித்துப் பண் படுத்திய புனத்திடத்துத் தழைத்து வளர்ந்துள்ள தினைக் கதிரின்மீது விழுங் கிளி முதலிய பறவைகளை ஓட்டுங் குற மகளின் கையிலுள்ள 'குளிர்' என்னுங் கிளிகடி கருவி களோ இசைப்பாட்டின் இசையை உடையனவாய் மிகவும் இனிய அழகை உடைத்தாயிருந்தன ; கிளிகளோ அவளது பறவைகளை ஓட்டுங் குரலைக்கேட்டு வெட்கி(த்தினைக்கதி ரினிடத்து)ப்பாய்தலைச் செய்யமாட்டாவாயின ; அதனால் வருந்தியழுத அவள் கண்களோ, மலைச்சாரலினிடத்து ஆழமான நீர்நிறைந்த பசிய சுனையிற் பூத்த குவளையின் வண்டு பயில்வதால் இதழ்கள் கட்டவிழ்ந்து குளிர்ந்த துளி களையேற்ற மலர்களைப்போன்றிருந்தன.

பாணித்து: பாணி-அழகு. கலைஇ-கலைந்து, சீர் குலைந்து. துளிக்கேற்ற - (உருபு மயக்கம்) துளியை யேற்ற.

---

பரணர்] 292 [குறிஞ்சி

இரவுக்குறிக்கண் வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக அலை உணர்ந்த தோழி தலைமகளின் காப்புமிகுதியை அவ னுணருமாறு உரைத்தது.

மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை;
ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.

(உரை). பகைமையே முகத்திற் காணப்படும் இந்தவூரில், சிரித்த முகத்தினனாகிய ஒருவன் ஒருநாள் வந்தனனாக, அதனால் நம்மிடத்துச் சிறிது ஐயமுற்று அன்றுமுதல் என்னன்னை தூங்குதலே இல்லாதவளாயினள். நீராடுவதற் குச் சென்ற ஒள்ளிய நெற்றியையுடைய மங்கையொருத்தி நீரிலேதானே மிதந்துவந்த பசுங்காயைத்தின்றகுற்றத்திற்கு அவள்தமர் எண்பத்தொரு யானைகளையும், அவளோடு சம நிறைகொண்ட பொன்னாற் செய்த பாவையையும் கொடுப் பவும் அவற்றை ஏற்றுக்கொள்ளாமலும், அவள்பெண்ணென் பதை மதியாமலும் அவளைக் கொலைபுரிவித்த 'நன்னன்' என்னும் வேளைப்போல என்னன்னையும் மீளாநரகத்துப் போவாளாக.

தப்பல் - தப்பு, தவறு. அவள் நிறை. நன்னன்—மேலைக் கடலோரத்துள்ள பூழி நாட்டை யாண்டவனும், சேரர் பரம் பரையினனுமாகிய ஒரு சிற்றரசன். இப்பாட்டால் இவன் கொடியனெனத் தோன்றினும், இவன் சிறந்த வீரனென் றும் மிகுந்த கொடையாளி யென்றும் தெரிகின்றது (அகம் 152, 375, 849). கீழ் 78-ம் பாட்டிற் கண்ட நன்னனும் இவனே. வரையா - நீக்க முடியாத; அளவிறந்த (கொடுந் துன்பங்களை உடைய) என்றுமாம். அன்னை - தோழியின் தாயாகிய செவிலித்தாய்.

புனல்தந்த பசுங்காயைத்தின்ற குற்றத்திற்காக ஒரு பெண்ணைக் கொலைபுரிந்த நன்னனைப்போலத் தன் தாயும் தானே வந்து எதிர்ப்பட்ட விடலையொருவனிடத்துக் காதல்கொண்டு கூடிய குற்றத்துக்காக எந் தலைமகளைக் காவல்செய்து வெளிப்போகவொட்டாமல் தடுத்து வருத்தி இறந்துபடச் செய்வாள் என்றும், அவனைப்போல இவளும் நரகத்துச் செல்வாளாக என்றுந் தோழி கூறினாள் என்க.

---

# தமிழ்ப் பாடம் 144.

[827-வது பக்கத் தொடர்ச்சி]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

இன்னண மணங்க னாரு
மாயமு மிரங்க னோக்கி
மன்னனு மறிவு தீர்ந்து
மனஞ்சிறி தயரும் வேலைப்
பொன்னிறப் பவளச் செவ்வாய்ப்
பொற்புறு பசிய மென்சூட்
டன்னமும் விசும்பி னீங்கி
யவ்வுழி யடைந்த தன்றே. 74

உரை:— இன்னணம் - இந்தப்படி, அணங்கு அன்னாளும் - இலக்குமிபோன்ற தமயந்தியும், ஆய முடம் - அவள் தோழிமார்களும், இரங்கல் நோக்கி - வருந்துவதைப்பார்த்து, மன்னனும் - நளமகாராஜ னும், அறிவு தீர்ந்து - அறிவு நீங்கி, மனம் சிறிது அயரும் வேலை -மனம் சிறிது சோர்கின்ற சமயத்தில், பொன் நிறம் - பொன் நிறமானதும், பவளம் செவ் வாய் - பவளம் போன்ற சிவந்த வாயையுடையதும், பொற்பு உறு - அழகுபொருந்திய, பசிய - பசுமை யான, மெல் - மெல்லிய, சூட்டு - உச்சிக்கொண்டை யை உடையதுமான, அன்னமும் - அன்னப்பறவை யும், விசும்பின் நீங்கி - ஆகாயத்தை விட்டு வந்து, அவ் உழி - அந்த இடத்தில், அடைந்தது - சேர்ந் தது.—அன்றே-அசை.

குறிப்பு:—நிறம்+பவளம்=நிறப்பவளம்:- இரண்டாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன்தொக்க தொகை யாகையால் நிலைமொழி யீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது ( ).
பவளம்+செவ்வாய் = பவளச்செவ்வாய்:— உவமத் தொகையாகையால் நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந் தது ( ).
விசும்பின் என்பதிலுள்ள, இன், ஐந்தாம் வேற்று மை உருபு. நீங்கல்பொருளில் வந்திருக்கின்றது. ( ).

---

எய்திய தூவி யன்ன
மின்னகைப் பவளச் செவ்வாய்
மையவாங் கரிய கூந்தல்
வாண்முக மினிது நோக்கி
நெய்தவழ் புலவு வைவே
னிடதர்கோ னிவனே யுள்ளத்
தையுறேல் கமலப் போதி
லணங்கிற்கு மணங்கு போல்வாய். 75

உரை :—எய்திய - வந்த அந்த, தூவி - இறகுகளை யுடைய, அன்னம் - அன்னம், மின் - பிரகாசம் பொருந்திய, நகை - பற்களையும், பவளம் - பவளம் போன்ற, செவ்வாய் - சிவந்த வாயையும், மையஆம் - மையைப்போன்ற, கரிய கூந்தல் - கருமையான கூந்தலையுமுடைய தமயந்தியின், வாள் முகம் - ஒளி பொருந்திய முகத்தை, இனிது நோக்கி - இனிமை யாகப் பார்த்து—"கமலம் போதில் - தாமரை மலரில் இருக்கின்ற, அணங்கிற்கும் - திருமகளுக்கும், அணங்கு போல்வாய் - திருமகள் போன்ற தமயந்தி யே, நெய்தவழ் - கொழுப்பு வழிகின்ற, புலவு -புலால் நாற்றமுடைய, வை - கூரிய, வேல் - வேலாயுதத்தை யுடைய, நிடதர்கோன் - நிடதருக்கு அரசனான நளன், இவனே - இவன்தான். உள்ளத்து - உன்மனத்தில், ஐயுறேல் - சந்தேகப்படவேண்டா, (என்று பின்னும் சொல்லும்).

குறிப்பு:—அன்னம்+மின்னகை:—எந்தத் தொடரா யிருப்பினும், வருமொழி முதலில் மெல்லின மெய் வருமாயின் நிலைமொழியீற்றுமகரமெய் கெடு மாகையால், அன்னமின்னகை எனப் புணர்ந்தது. ( ).
கமலம்+ போது = கமலப்போது: — கமலமாகிய போது எனவிரியும் இது இருபெயரொட்டுப் பண் புத் தொகையாகையால்,நிலைமொழியீற்று மகரமெய் கெட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது ( ).
தவழ்+புலவு=தவழ் புலவு:—இது வினைத்தொகை யாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிக வில்லை ( ).
கரியகூந்தல்:—இது குறிப்புப் பெயரெச்சத் தொடர், ஆகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிக வில்லை. கூந்தல், என்பது இங்குக் கூந்தலையுடைய தமயந்தி என்று பொருள் படுகின்றதானாலும், கரிய கூந்தல் என்பதை அன்மொழித் தொகையென்று கொள்ளலாகாது. அன்மொழித் தொகை எப்பொழு தும் ஒரு தொகைநிலைத் தொடருக்குப் புறத்தேயே பிறக்கும். 'கரிய கூந்தல்' என்பது பெயரெச்சத் தொடராகையால் தொகாநிலைத்தொடர். ஆகை யால் 'கரிய கூந்தல்' என்பதை (உடைய தமயந்தி என்னும் சொற்கள் அதன்புறத்தே தொக்கு இருப் பதுபோல் தோன்றினாலும்) அன்மொழித் தொகை என்பதற்கில்லை கூந்தல், என்பதைத் தனியாக எடுத்து அது, கூந்தலையுடைய தமயந்திக்கு ஆவ தால், சினையாகுபெயர் என்று கொள்ளவேண்டும் ( ).

---

மழைமதர் நெடுங்கட் செவ்வாய்
வளர்முலை மடந்தாய் நின்மேல்
விழைவிகந் துரைத்தா னல்லன்
விண்ணவர்க் கிசைந்த மாற்றம்
பழுதுறு மென்னு மாற்றாற்
பகர்ந்தனன் பரிதி வேலா
னழுதகங் குழைந்தி டேலென்
றன்பினொ லறைந்த தன்றே. 76

உரை:—மழை - மேகம்போன்றதும், மதர் , களிப் புடையதும் ஆன, நெடும் - பெரிய, கண் - கண்களை யும், செவ்வாய் - சிவந்த வாயையும், வளர்முலை - பூரிக் கின்ற முலைகளையும் உடைய, மடந்தாய் - பெண்ணே! —நின்மேல் - உன்னிடத்து, விழைவு இகந்து - ஆசையைவிட்டு, பரிதி வேலான் - சூரியனைப்போன்ற வேலாயுதத்தையுடைய இந்நளன், உரைத்தான் அல் லன்-உரைத்தவன் அல்லன், விண்ணவர்க்கு-தேவர்களு க்கு, இசைந்த-உடன்பட்ட, மாற்றம்-வார்த்தை, பழு துஉறும்என்னும்ஆற்றால்-தவறிவிடும்என்றபடியினால், பகர்ந்தனன் - இவ்வாறு தூதுசொன்னான்—(ஆகை யால்), அழுது - நீ அழுது, அகம் குழைந்திடேல் - மனம் உளையவேண்டா, என்று - என்று, அன்பினால் அன்பினோடு, அறைந்தது - அன்னம் கூறியது. (அன்றே - அசை.)

---

வடுவகிரனைய வுண்கண் மடந்தையோ டிவ்வா றோதிக்
கடகளி றென்ன நின்ற காளைதன் முகத்தை நோக்கா
வுடையபே ரறிவாற் காம முள்ளமைத் தின்ன கூறிற்
கொடிநெடுந் தானைவேந்தே கோற்றொடியாற்றுங்கொல்லோ

உரை:—வடுவகிர் அனைய - மாவடுவின் பிளவைப் போன்றதும், உண் - மையிட்டதும் ஆன, கண்-கண் களையுடைய, மடந்தையோடு - தமயந்தியினிடத்தில், இவ்வாறு ஓதி - இப்படிச்சொல்லி, (பிறகு) கடகளிறு என்ன - மதயானைபோல், நின்ற - நின்ற, காளைதன் - காளைபோன்ற நளமகாராஜனுடைய, முகத்தை நோக்கா - முகத்தைப் பார்த்து, "உடையபேர் அறி வால் - உனக்கிருக்கின்ற பெரிய அறிவினால், காமம் - காதலை, உள் அமைத்து - உள்ளே அடக்கிக்கொண்டு, இன்ன கூறில் - இப்படி இவள் தேவர்களை மணக்க வேண்டுமென்று நீ தூதுபேசினால், கொடி-கொடிகளை யுடைய, நெடும்-பெரிய, தானை-சைந்நியத்தையுடைய அரசனே, கோல்தொடி-அழகிய வளையல்களையணிந்த தமயந்தி, ஆற்றும் கொல்லோ -பொறுப்பாளோ.

குறிப்பு :—நோக்கா—என்பது எதிர்மறை உருவத்தி லிருந்தாலும், உடன்பாட்டுப் பொருளில் வந்த வினையெச்சம் ( ).

---

மாங்குயிற் குதலைப் பேதை
மனமுநீ யியைந்த வண்ணம்
தீங்கற வுரைத்த வாறுந்
தேவர்மற் றுணரா ரல்ல
ரீங்கினி யுரைப்ப தென்னை
யிவ்வயி னிகழ்ந்த வெல்லா
மாங்கவர் தம்பா லேகி
யறைதியென் றறைந்த தன்னம். 78

189127

உரை :—மாங்குயில் - மாமரத்திலுள்ள குயிலைப் போன்ற, குதலை - குதலைச் சொற்களைப் பேசுகின்ற, பேதை - பேதையாகிய இந்தத் தமயந்தியின், மன மும் - கருத்தும், இயைந்த வண்ணம் - உடன்பட்ட படி, நீ - நீ, தீங்கு அற - குற்றமில்லாமல், உரைத் தவாறும் - சொன்னபடியும், தேவர் - தேவர்கள், (மற்று - அசை) உணரார் அல்லர் - தெரியாதவர்கள் அல்லர். ஈங்கு இனி உரைப்பது என்னை - இனிமேல் இங்கு நீ சொல்வதற்கு என்ன இருக்கின்றது. இவ் வயின் - இவ்விடத்தில், நிகழ்ந்த எல்லாம் - நிகழ்ந்த வைகளை யெல்லாம், ஆங்கு - அங்கே, அவர் தம் பால் - அத்தேவர்களிடம், ஏகி - சென்று, அறைதி - சொல்," என்று - என்று, அன்னம் - அவ்வன்னப் பறவை, அறைந்தது - கூறியது.

---

அவ்வுரை கேட்ட லோடு
　　மடையலர்ச் செகுக்கும் வேலான்
மவ்வலங் குழலி னுடன்
　　மனவலி யினிதி னோர்ந்து
செவ்விதின் மனமுங் கண்ணுந்
　　தெரிவைமேற் கிடப்ப மாறுக்
கவ்வைகொள் வாயி னீங்கி
　　விஞ்சையிற் கரந்து போனான். 79

உரை :—அவ்வுரை - அன்னம் சொன்ன அந்த வார்த்தையை, கேட்டலோடும் - கேட்ட பிறகு, அடையலர் - பகைவர்களை, செகுக்கும் - அழிக்கின்ற, வேலான் - வேலாயுதத்தையுடைய நளன், மவ்வல் அம் குழலினாள் தன் - வனமல்லி மலரணிந்த அழகிய கூந்தலையுடைய தமயந்தியின், மனம் வலி - மன உறுதியை, இனிதின் - இனிமையாக, ஓர்ந்து - தெரிந்துகொண்டு, செவ்விதின் - செம்மையாக, மனமும் கண்ணும் - தன் மனமும் கண்ணும், தெரிவை மேல் - தமயந்தியின்மேல், கிடப்ப - தங்கியிருக்க, மாறா - நீங்காத, கவ்வைகொள் - ஒலியையுடைய, வாயில் நீங்கி - வாயிலை விட்டு, விஞ்சையில் - மந்திரத்தினால், கரந்துபோனான் - மறைந்து சென்றான்.

குறிப்பு:—அடையலர்ச் செகுக்கும்:—இது இரண்டாம் வேற்றுமைத் தொகையாயினும் எழுவாய்த் தொடரோடு மயங்கக்கூடுமாகையால் அம்மயக்கத்தை நீக்கும்பொருட்டு வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது. (　　　)

—

காரிகை யுளமு நாணுங் கவர்ந்தனன் கரந்து போய
மூரிவெஞ் சிலைக்கை வீரன் கடவுளர் முன்ன ரேகி
நேரிழை தன்பாற் றூது போயபி னிகழ்ந்த வெல்லாஞ்
சோர்வுறா துரைத்தான் றேவர் தோன்றல்பால்
　　　　　　　　　　　　　[மகிழ்ச்சி கூர்ந்தார். 80

உரை :—காரிகை-தமயந்தியின், உளமும்நாணும்- மனத்தையும் நாணத்தையும், கவர்ந்தனன் - கவர்ந்தவனாகி, கரந்துபோய - மறைந்துபோன, மூரி - வலிமைமைந்த, வெம்-கொடிய, சிலை - வில்லையேந்திய, கை- கையையுடைய, வீரன் - வீரனாகிய நளன், கடவுளர் முன்னர் ஏகி-தேவர்களுக்கு முன் சென்று, நேரிழை தன்பால் - நேரான ஆபரணங்களை யணிந்த தமயந்தியினிடத்தில், தூது போயபின் - தூது போனபிறகு, நிகழ்ந்த எல்லாம் - நிகழ்ந்தவைகளை எல்லாம், சோர்வு உறாது - தளராமல், உரைத்தான் - சொன்னான் ; தேவர் - தேவர்களும், தோன்றல்பால் -நளனிடத்தில், மகிழ்ச்சி கூர்ந்தார் - மகிழ்ச்சியடைந்தார்.

குறிப்பு:—இதனுடன் நாம் நைடதத்தில் பாடத்திற் கெடுத்துக்கொண்ட பாகம் முடிகின்றது. இனி இவ்வாண்டில் வரவிருக்கும் இதழ்களில் புணரிலக்கணத்தில் எஞ்சியிருக்கும் விதிகளைக் கூறி முடிப்போம்.

## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[836-வது பக்கத் தொடர்ச்சி]

தன்ன தாயினூற் றந்திடத் தாழ்வனே.

கூனியின் இறுதிக்கூற்றாய அக் 'கெடுத்தொழிந்தனை' என்ற தொடக்கத்துச் செய்யுள் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரது விருப்பத்திற் கிணங்கிப் பொருளமைய இயலாமையை இதுகாறுங்கண்டோம். முன்னைய சுல்கப்பிரதிஞை மந்தரையால் நினைப்பூட்டப்பெற்றதாற்றான் கைகேயி வரமிரண்டை வியாஜகமாகவைத்து மன்னவன்வாய்மை வழுவாது காக்குமாறு பரதனுக்கு நாடும் இராமனுக்குக் காடும் கேட்கலாயினள் என்னும் துணிவை எய்த முயல்கின்ற பாரதியார், அச் சுல்கச்சூளொன்று இருந்ததென்னும் உண்மையை நிலைநிறுத்துவதற்கு, அடவி கடந்து தன்னை அழைத்தேகும் விழைவினோடு நின்ற பரதன்முன் இராமன் பேசிய வாசகமொன்றையும் ஆதாரமாகக் காட்டுபவராய்ப் பின்வருமாறு வரைகின்றனர்:—

"இது சம்பந்தமாக வூன்றி நாஞ் சிந்திக்கவேண்டிய கவிகளி னின்னுமிரண்டொன்று கிளைகண்டுநீங்கு படலத்திலுண்டு. கூனிகூற்றாய மேற்கவியோடியையும், அதன் பொருளாராய்ச்சிக்குத் துணையுமாமச்செய்யுள்களையுஞ் சிறிதிங்குக் கவனிப்போம். 'பசைந்த சிந்தைப் பரதன்' இராமனை மீண்டழைத்துவந்து அரசனுக்கும் நோக்கத்தால் வனம்போந்தனன். அவன்வாய்த் தன் தந்தையார் மரணமறிந்து இராமன் வருந்தித் தேறியபின், அவர்க் கீமக்கடன்முறை யாற்றினான். மற்றையா விராமன், வற்கலையுடுத்தி, மெய்ம்மாசுடன், நகையிழந்த முகத்திற் கற்கனியக் கனிகின்ற துயர்ததும்ப, 'அவலமீ'தென எழுதிய 'படிவமொத்த' விரதவேடப் பரதனைப் பார்த்து, "வரதன் (தசரதன்) துஞ்சினான்; வையம் அவன் ஆணையால் சரத நின்னதே: மகுடந் தாங்கலாய், என் கோல்? கூறெனப் பரிந்து கூறினான்." இதுகேட்டதும், 'பதைத்தெழுந்து, தொழுது நின்று,' இராமனை நெடிது நோக்கி, "வரன்முறையு மறனும் பிறழ்ந்து வசைகொள்வனோ? முதற்பிறப்பா லுனக்குரிய தரசு; தந்தைபால் என்தாய் வரங்கொண்டு தரணி வௌவித்தரி னதை வாங்கத்தரியேன். மீண்டுவந் துன்னரசை நீ யாண்டு வசை நீக்கிக் காத்தல் (நின்) கடன்," என்று கரவில் சிந்தையன் கதறலாகினன். ஈண்டுக் கம்பர் பரதன்வாய்ப் பெய்துவைத்த சொற்கள் கவனிக்கற் பாற்று.

"பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்பதம்......நீதியிற் றிறம்பி, வாளினூற் கொன்று அறந்தின்றா லென, அரசதாள்வனோ? எந்தை...மீண்டரசு செய்கென (தன்) சிந்தையாவதுந் தெரியக்கூறினான்" என்பது கவிவாக்கு. தசரதன் ஆணையால், சரதம், அயோத்திநாடு பரதனது, என்றிராமன் முதற்கூறியதை யொவ்வாத தம்பி, தமையன் பிறப்பின் சிறப்புரிமையை வற்புறுத்திக்காட்டி, "மீண்டரசு செய்து," தன்னைப் பழியாழிக் கரையேற்றி யுதவும்படி குறையிரக்கின்றான். அதன்மேல், அறத்துறையாற்றின் முறையிறவாத தம்பியின் தூய்மனத்துணிவும், தந்தை மரணத்தாலும் தமையன் பிரிவாலும் இருமுதுகுரவரால் வந்த வசையாலு மிற்ற அவன் மனப்பான்மையும் நன்கறிந்த இராமன், பரதன்பாற் பழியின்மையும், அவனுக்கு அரசுரிமை யறத்தாறுண்மையு மெடுத்துக்காட்டி யவனைத்தெருட்டுமாறு பின்னுஞ் செப்புவான்:—



" 'வரனி லுந்தைசொல் மரபினா லுடைத்
　தரணி நின்னதென் றியைந்த தன்மையால்,
　உரனில் நீபிறந் துரிமை யாதலால்,
　அரசு நின்னதே, ஆள்க; என்னவே."

இராம னிது சொல்லவும் பரதன் பருவரல் நீங்கித் 'தன்னெண்ண மீடேறியது ; இராமனினித் தனக்கிணங்காதரசை மறுக்குமாறில்லை' யெனக்கண் டுவகைகொண்டு தாழாதுடனே, "பார் என்னதாகில், யானின்று தந்தனன்; மன்ன! போந்து நீ மகுடஞ் சூடென" விரைந்து பணித்து இராமனை யற்புத்தளையாற் பிணிக்கின்றான். அதினின்று நெகிழ்ந்து நழுவ வழிகாணு திராமன்,

"எந்தை யேவ, ஆண்டு ஏழொடேழனா
　வந்த காலம்நான் வனத்துள் வைக, நீ
　தந்த பாரகந் தன்னை மெய்ம்மையால்
　அந்த நாளெலா மாள், என்னாணையால்.'

என்று கூறி, அதனையே வானவரும் அசரீரியா வற்புறுத்தல்காட்டி, "இனி நீ மறுக்கற்பாலதன்று: யான் உனை யிரந்தனன் : (வரதன் ஆணையாலன்றி) இனி என் ஆணையால், ஆனதோர் அமைதியின் அளித்திடார்,' எனாத் தான் தன் துணைவன் துணைமலர்த் தடக்கைபற்றி, வேண்டலாயினான். தன் பெருவிருப்பிற்கிணங்கி இவ்வாறு தகவுரைத்த தமையன்சொற் கிசைந்து 'பசைந்த சிந்தையான், "ஆம் (அப்படியாகட்டும்). எனில், ஏழிரண்டாண்டில், ஐய, நீ... நகர் நண்ணி, நானிலங்கோமுறை புரிகிலையென்னில், (நான்) கூர் எரி (புகுந்து) சாம் ; இது சரதம்: நின்னாணை" என்பது சொல்லிப் பின், (இதுவரை) "துன்பம் ஒரு முடிவி"லாதான் "யாதுமோர் துன்பிலனாய்," இராமனின் முடிவுரையை எதிர்பார்த்து நோக்கினன். "அன்பின னிராமன் 'உருகினனாய்,' அன்ன தாகெ"னப் பரதனுக்குப் பதிலளித்தான். சம்மதித்த பரதன் இராமன் பாதுகையை யிரந்து பெற்று மீண்டான்.

" ஈண் டிச்சோதரர் சம்வாதத்திற் றெளியக் கிடப்பன சில குறிப்பாம். வரமிரந்த கைகேயிக்கு வாக்குத் தந்த தசரதன் "ஆணையா"ல் (அயோத்தி) அரசுக்குரிய 'வையம் நின்னதே சரதம்' என் றிராமனாரம்பத்திற் கூறவு மதனைத் தகவிலதாய்த் தவிர்த்து மறுத்து, முதல்வனாய்ப் பிறந்ததனால், தமையனுக்குடைமையாம் அரசு தனதாமாறில்லையென விலக்கிய பரதனே, பின்னிறுதியி லிராமன் "உந்தை சொல் மரபினால் தரணி நின்னது. உரனில் நீ பிறந்துரிமை யாதலால் அரசு நின்னதே. ஆள்க," என்று கூறக்கேட்டதும், நாடு தனதாகக்கொண்டு, மீண்டதனைத் தமையனுக்குத் தானே தருவதாய்ச் சொல்லலுற்றான். "மூத்தவனாய்ப் பிறந்த தன்மையால், நீயுடைத் தொல்லரசை நீயே மீண்டு பெற்றாளுக," என்று மன்றாடிய பரதன்சொல்லை நிராகரித்த இராமனே, "பார் என்னதாகில், யானின்று தந்தனென். 'போந்து நீ மகுடஞ்சூடு,'" எனப் பரதன் சொன்னது மிசைந் தரசையேற்றுத் தான் பதினாலாண்டு வனமிருந்து திரும்பிவரும்வரை 'தன் ஆணையால்' நாட்டைப் பரதன் பரிபாலித்துவரும்படி பணிக்கலாயினன். கைகேயி வரமிரக்கத் தசரதன் தந்த ஆணையால் அயோத்தியரசு தனதாகக்கொள்ள விசையாத பரதன், 'என் ஆணையால் ஆள்க' என் றிராமனேவவு மிசைகின்றான். இவ்வா றிராமனும் பரதனும் ஒருவருக்கொருவர் முறையே முதலிற் கூறிய விவகாரங்க ளேற்கொணாதனவாய் மறுத்து விலக்கியவர்கள், இறுதியி லெடுத்துரைத்த நியாயத்தாலிணங்கி யிசைவதற்கு, இவர் பின்னையகூற்று முன்னதின் வேறுபட்டதும் வலியுந் தகவும் வாய்ந்ததுமா யிருத்த லின்றி யமையாத தென்பது விசதமன்றோ? தசரதன் தன் தாய்க்கு வரமாத் தந்ததால் தான் 'தரணி' பெறுமாறில்லை யென்பதும், இராமன் பின் "உந்தைசொல் மரபினால், உரனில் நீ பிறந்துரிமையாதலால், அரசு நின்னதென்ன"ச் சுட்டிய நியாயத்தால் தந்தைநாடு தனக்காமென்பதும், பரதன் கருத்தாகக்காட்டினர் கம்பர். எனவே, முதற்பிறந்ததால் இராமனெய்தவேண்டுமரசு தாய்க்கு வரமாத் தந்தைதந்த 'ஆணையால்' தனதாகாதென்று துணிந்துநின்ற பரதன், தான் பிறந்ததாலுரிமையெய்தும்படி தந்தை சொன்ன தோர சொன்மரபுண்மையை இராமன் சொல்லக்கேட்டதும், நாடு தனதாமாறுகண்டு, உடையனான தானே தமையனுக்கு அதைத் தருவதற்கு முன்வரலாயினான். தமையனுக்குத் தான் தருமுன், தனதுடைமை அறத்தாறழுங்கா நல்லுரிமையானலன்றித் தருமத்தின்தேவும், செம்மையின் ஆணியுமான பரத னிராமனுக்குத் தான் அரசு தருவதாகப் பேசத் துணியானென்ப தொருதலையன்றோ ? முன் பிறந்ததால், தமையனதா மரசைத் தாய் வௌவியதாகக்கருதி வெறுத்த பரதனதெண்ணம் தவறென்றும்,......பிறந்ததன்மையாற் பரதனுக்கே அரசுரிமையைத் தசரதன் சொல்லிய பழைய சொன்மரபுண்டென்றும் எடுத்துரைத்து அதுவரை யிணங்காப் பரதன் தூயமனதை யறத்துறைகாட்டி இராமனிணக்கியதாகக் காண்போம். இதனாற் றசரதன் கைகேயிக்கு, கேட்கத்தந்த வரச்சொல் வேறு; பரதனுக்குப் பிறப்பா லரசுரிமையாம்படி சொன்ன மரபுச்சொல் வேறு; என்று தெளிகின்றோம். முன்னதை அறங்கொல்லும் பழிதருவதாய் வெறுத்துமறுத்த 'தருமத்தின்தே'வான பரதனே, பின்னதை நெறிமுறைதிறம்பா அறத்துறை நிற்பதா யங்கீகரிக்கின்றான். அவ்வாறவன் பிறந்ததனாலுரிமையெய்தும்படி தசரதன் சொன்ன மரபுடைச்சொல் யாதாயினுமாகுக; அச்சொல் பரதன் பிறக்குமுன் சொன்ன சொல்லாதல் வேண்டுமென்பதுமட்டும் வெள்ளிடைமலையாம். அன்றேல், இராமன் பிறப்பாலுரிமைபெறாது, அறத்துறையாற் பரதனுக் கரசு பிறப்புரிமையாமாறில்லை. ஏனெனில், இராமன் பிறந்துரிமையெய்தியபின் தந்தை சொன்ன எச்சொல்லாலும் அரசுரிமையை இராமனுக்கு விலக்கித் தான்கொள்வது "நீதியிற்றிறம்பி அறங்கொன்று தின்பதாகு" மென்னுந் துணிவுடைய பரதன், தாதை தன் தாய்க்கு வரமாயளித்த சொற்கேட்டு மதனைக் கடக்கொணாப் பழியாகக்கருதி அறவே வெறுக்கின்றான் : பின்னிராமன் வாயிலிம் மரபுடைச் சொல்லுண்மை கேட்டுப் பிறப்பாற்றனக் கரசுரிமையாவது கண்டு, அறத்துறையிலது தனதாகலாற்றா னேற்கின்றான். ஏற்ற தன்னுடைமையை அற்புக் கையுறையாகத் தமையனுக்குத் தான் சமர்ப்பிக்கத் துணிகின்றான். "பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்பதம்"—அயோத்தி அரசு,' என்ற பரதன் கூற்றை அறமாகக்கொள்ளாத இராமனும், முன் தன் தந்தை தந்ததோர் அறம்வழாமரபாக்கச் சொல்லுண்மையும், அதனால் அரசு பரதனுக்கே பிறப்புரிமையாவதும் தம்பிக்குத் தெரிவித்து, அதன்மேல் அறமுறையா லரசுக்குரியனாய பரதன் தன்பால் உழுவலன்பால் உவகையோ டுதவ மறுக்கொணாது தான் அதைப் பெறுவதற் கிசைய லுற்றான். பிறப்பால், இராமனுக்கின்றிப் பரதனுக்கே அறத்தா றரசமையும் மரபுவழுவாததோர் பண்டைச்சொல்லுண்மை ஈண்டுப் பசுமரத் தாணியாக வலியுறுத்தப்படுகின்றது.

" 'தயாமுதலறமான' இராமன், 'நியாயமத்தனைக்கு மோர் நிலையமான' பரதன் புனிதமனமிசைய, இறுதியி லெடுத்துரைத் திணக்கிய மரபுவழா அறமமைந்து பொருள்பொதிந்த தசரதன் சோரொணாச் சொல்லுண்மையைத் தாசரதி வாய்க்கேட்டு, அவன் தெருட்டத் தெளிந்த பரதனுடன் நாமுஞ் சிறிது தெளிவு காண்பாம். 'வரதன் வரத்தால் அரசு நினதெ'ன்ற தமையன்சொல் தகவிலதாக விலக்கி மன முளைந்த பரதன், பின் "தந்தை முன் சொல்மரபினால் அவனுடைத்தரணி நின்னதென் றியைந்த தன்மை"யை இராமன் காட்டக்கண்டு, நாடு தனதாகக்கொண்டான். அதுவேபோல், தெய்வக்கற்பினளாய கைகேயியின் 'வரன்

முறை அறத்திற் பதிந்து சலியாது நின்ற தாயசிந்தையும் மந்தரை யிறுதிக் கூற்றும் மேற்கவிக் கருத்துணர்ந்த பிறகே திரிவதாயிற்று. அதனால், அரசு பரதனுக்கே பிறப்புரிமை யென்பதையும், இராமனுள்ளிட்டார் பிறர்க் காமாறில்லை யென்பதையும் தெரிவிக்குமோர் சொன்மரபையே இக்கவியும் சுட்டினதாகவேண்டும். இல்லையாமேல், அவன் தாயசிந்தை இராமனரசைப் பரதனதாக்கும் பழி வழியிற் றிரியுமாறில்லை.''

முன், 'கெடுத்தொழிந்தனை' என்ற துவக்கத்துச் செய்யுளில், அதுவரையில் கூறியவைகளல்லாமல் புதியதாய வேறொன்றைக் கூனி கூறினளென ஸ்ரீமான் பாரதியார் கருதியதுபோன்றே, இங்கு, 'வரனிலுந்தை' என்ற இச்செய்யுளிலும் இராமன் வேறாய புதியதொன்றைப் பரதனுக்கு விளக்கியிருத்தல் வேண்டுமெனக் கொள்கின்றார். இல்லையேல், நாடு கொள்ளற்கு அங்குக் கைகேயி யிணங்கிய காரணம் வேறு இல்லையென்று வாதித்தபடி, பரதனும் அந்நாடு தனதென்று கருதற்கு அயற்காரணம் இல்லாததாகும் என்பார் அவர். எனினும் இச்செய்யுளின் தொடர்ச்சி அமைப்பு செவ்வி முதலியவைகளை நோக்குங்கால், அங்குக் கூனி தான் முன்சொன்னவைகளையே முறைப்படுத்தித் தொகுத்துரைத்து முடித்ததுபோல் இங்கும் இராமன் தான் செப்பி வந்தனவற்றையே இறுதியில் வற்புறுத்திய திவ்வாசகம் என்பது புலப்படும்.

"உந்தை தந்த உலகினை யாளாதித் தவவேடம் நீ தாங்கிய தென்கொல்" என்று வினவிய இராமனுக்குப் பரதன், "கொழுநனைக் கொன்ற ஒரு பாவியின் வயிற்று வந்த ஏழையே னெனக்குத் தவமொன்று மடுக்காதென்ப துண்மையே. தவமும் செய்யேன், சாகவுஞ் சாகேன்; மற்றென்பழி மாறுமாறெங்ஙனம். முறையின் நீங்கிய அரசிலும் மிகக் கொடியது வேறு யாதுளது?

> பிறந்து நீயுடைப் பிரிவி றெல்பதந்
> துறந்து மாதவந் தொடங்கு வாயென்றால்
> மறந்து நீதியிற் றிறம்பி வாளிற்கொன்
> றறந்தின் றூலென வரச தாள்வெனோ

அரசு வவ்வ யான் இறவுபார்க்கின்ற ஓர் வஞ்சகப் பகைவனேயோ! ஆதலின், "உந்தை தீமையும் உலகுறுத நோய் தந்த தீவினைத் தாய்செய் தீமையும் நீங்க எந்தை இராமனே, நீ மீண்டு அரசு செய்க' என்று வேண்டினன் பரதன். பிறப்பினால் உரிமையுடைய இராமன் இருக்க, முறையின் நீங்கி அவ்வரசைத் தானாளல் அடுக்காதென்பது பரதனதுரையின் பிண்டப்பொருள். இதற்கெதிருரைக்கும் இராகவன் முதலில், பிறப்புரிமையும் முறைநெறியும் எவையேயாயினும், அரசன் எவ்வாணை தந்தானோ அதுவே நீதியுஞ் சீலமும் ஆகு மென்றோர் விதியை,

> முறையும் வாய்மையும் முயனு நீதியு
> மறையு மேன்மையோ டறனு மாதியாந்
> துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
> விறைவ ரேவலா லியைவ காணையா

என எடுத்துக்காட்டிப் பிறகு குரவரின் பெருமையைச் செப்பி, அக்குரவருந் தந்தைதாயரு மென்பதை வற்புறுத்தி, அரசனோடு குரவனுமாய தன் தந்தையுந் தாயும் ஒருங்கே பணித்த தொன்றைக் கைவிடல் நீதியாகா தென்பதை நிலைவுறுத்தினன். அதுவுமன்றித் தான் அரசுசெய்தால் தந்தையோ பொய்யனாகித் தாழ்நரக மாளானோ என்பதையும் காட்டினன். முறையிறந்து அரசாள மறுத்த பரதனது சொற்களுக்கு மாற்றுரை இவை. "பரதா, பிறப்பினால் அரசெனக்கு உரியதென்றும், நீ அதனை ஆள்வாயெனின் அது முறை இகந்ததாகுமென்றும் எண்ணினாய். இறைவனும் தந்தையும் ஏவியதொன்றே முறையென்று யான் இயம்பியதற் கிணங்க,

> வரனில் உந்தைசொல் மரபினா லுடைத்
> தரணி நின்னதென் றியைந்த

தன்மையாயிற்று. பிறப்புரிமைக்கும் மேலாயதாம் பெற்றோர் விதித்த பணி. அதுவுமன்றி நீயுமோர் அயலானல்லன். மூத்தவன் என்றோர் சிறப்பெனக்கு இருப்பினிருக்கலாமேயல்லாது பிறப்பளவில் உனக்கும் எனக்கும் இருக்குமவ்வுரிமை பொதுமையே. உரனில் நீ பிறந்து உரிமையாயிற்று; உன் தந்தையும் உனக்குத் தந்தனன்—ஆதலால், அரசு நின்னதே, ஆள்க" எனமுடித்தனன் இராமன். "பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்பதம்" என்ற பரதனுக்கு மறுமொழியாம் இது, 'நீயும் பிறந்து உனக்கும் உரிமையாயது' என்பதையும், 'மூத்தவன் என்ற முறையால் அதனைப் பிரிவில் என்று எண்ணற்க; தந்தையின் ஏவலால் அது பிரிதல் கூடும்' என்பதையும் விளக்குகின்றது. ஆதலால் 'நீ பிறந்து உரிமையாதலால்' என்னுஞ் சொற்களில் புதிய மந்திரம் யாதுமில்லை. ஆயினும், இதை காறும் மருண்டிருந்த பரதன் இதனால், அரசுரிமை தன்னதென்று தெருண்டு விட்டனன் எனப் பகர்கின்றார் பாரதியார். இது அமையாதென்பது,

> முன்னர் வந்துதித் துலக மூன்றினு
> நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
> என்ன தாகில்யா னின்று தந்தனென்
> மன்ன போந்துநீ மகுடஞ் சூடு

என்று பரதன் ஊக்கமொடு உரைக்கின்ற சொற்களால் தெளியலாகுமே. இராமன் காட்டிய காரணங்களை ஏற்றுக் கொள்ளானாகி, 'பிறந்து நீயுடைப்பிரிவில் தொல்பதம்' என்று முதலில் உரைத்தபடியே, மீண்டுமிங்கு, "நீ பிறந்த பார்" எனவே சாதிக்கின்றதை மறந்தாலன்றிப் பரதன், சூல்கச்சூளினாலோ வேறு எதனாலேயோ அரசுரிமை பிறப்பினால் தனதாயிற்று என்னும் நிச்சயம்பற்றி மேல்வருங் கருமங்களை நிகழ்த்தினனெனக் கொள்வதற்கு இடமில்லை. "நீ பிறந்த பார் என்னதாகில் யான் இன்று தந்தனன்" என்னுங்கால் பரதன், தன்னதென்ற தன்மையிலேயே பேசினன் என்று எண்ணுவது நேரிதன்று. "இராமா, அரசு என்னுடையதென்று நானே இயம்புகின்றாய். அது என்னுடைமை எம்முறையில் எம் மரபில் ஆயிற்றென்பதை இனி வாதிக்க வேண்டா. உன்னுரைப்படியே அது என்னுடையதென்றே கொள்வோம், ஆயின் யான் உய்ந்தேன். உனக்கு யான் என்னுடைய அரசைக் கொடுப்பதற்கு யாதும் இடையூறு இல்லையாகையால் இப்பொழுதே தந்தனன். வந்து நீ அரசாள்க. முறையும் நெறியும் இருக்குமாறிருக்க. உன் உரிமையிலோ மற்று யான் கொடுத்தோ, வையகம் கலங்குறுவணம் நீ ஆளவேண்டு மென்பதொன்றே என் விருப்பம்" என்பதன்றி, 'என்னதாகில்' என்னுஞ் சொற்களுக்கு வேறு குறிப்பு இருக்க இயலாது.



எனின், இந்தச் செய்யுளால் சூல்கச்சூளுண்மைதான் பரதனுக்கு இராமனால் அறிவுறுத்தப் பெற்றதென்று ஒருதலையாய் உரைக்க ஒண்ணுமோ. வான்மீகிமுனிவர் 'விசதமாக'க் கூறினரோ அல்லரோ என்பதன்று நம் ஆராய்ச்சியில் அடங்கவேண்டியது. கம்பர் அதனையே குறித்தாரோ அல்லது கொள்ளாது விட்டாரோ என்பதே கேள்வி. விட்டிருத்தலே இக்கவிவரர் கருத்திற்கிசைந்ததாகும்என்பதைப் பின்னர்க் காண்போம். அதுவுமன்றி, சூல்கச்சூள் தயரதன் செய்திருந்தது உண்மையோ அன்றோ வென்பதும் கம்பரது இதையத்தை ஓர்வதற்கு இன்றியமையாததொன்றன்று. அச்சூளறத்தை நிலைநிறுத்துவது தான் கைகேயியின் நோக்கமோ அல்லது வேறுதானுண்டோ என்பதையே நிச்சயிக்கவேண்டியது இவ்வாராய்ச்சியின் கடமையாவதை மறத்தலாகாது.

# தனிப்பாடல்கள்.

நவாலி. கா. சோமசுந்தரம் பிள்ளை.

## முருகன்

அஞ்சுமுக முண்டாயி னாறுமுக முண்டடையும்
விஞ்சுவினை யுண்டாயின் வேலுண்டால்—நெஞ்சில்
அறைகுறையுண் டாயினிபண் டாறு செவியுண்டே
குறையருளுண் டாயினுண்டோ கூறு.

ஆறு முகமு மறிமுகமு முன்னிலன்றி
வேறு முகத்திலிலை வேலவனே—கூறும்
பழவினையின் கையில் வரிப்பந்தாய்ச் சுழலும்
எளியேனை யாள்வா யினி.

என்னுடல முன்னுடைமை யானுன் வழியடிமை
என்னறிவு நின்னையன்றி யில்லையால்—அன்னதனால்
ஒன்று மெனதுசெய லில்லை யொருமுருகா
நன்றுதீ துன்னவியார் நான்.

குடியிருக்கும் வீடு குலைந்தா லதனை
வடிவாக்கி யீதல் வழக்கு—வடிவாக்க
என்னாலா காதரசே யானடிமை நீயிறைவன்
உன்னாலா காதொன் றுண்டோ.

ஐயன் விழிபயந்த வாறு முகமணியே
கைகளிரண் டாறுடைய கற்பகமே—செய்ய
வடிவேலா வள்ளி மணவாளா தெய்வப்
பிடிகேள்வா நீயே துணை.

கந்தா கடம்பா கதிர்வேலா கார்த்திகைமார்
மைந்தா பழநி மலைமகனே—பந்தவினை
பாற்றவா சோதி பதியவா வெம்பிறவி
ஆற்றவா ஆறுமுக வா.

செந்தமிழ்க் குருவே போற்றி தேவர்கோ மகனே போற்றி
வெஞ்சிற வவுணர்க் காய்ந்த வெற்றிவேற் குமரா போற்றி
இந்திரன் மருகா போற்றி எயினர்க டலைவா போற்றி
சந்தணி கலசக் கொங்கைத் தையலார் கணவா போற்றி.

அன்றுதொட் டிருக்குயிர தாய் நின்ற
வருட்டிற மொருசிறி தகன்று
பொன்றிகழ் மேனிப் பொலிவு கொண்
டெழுந்து போந்தெமைத் தேடியே புகுந்து
கன்றினைக் கண்டவா வெனக் கசிந்து
கதிமறை மொழியறை ஞானக்
குன்றினை யெனையாள் குருமணி தன்னைக்
குரைகழல் பணிகுவன் குறித்தே.

அன்பினில் விளைந்த வமுதே தேனே
யறிவினுக் கறிவதாய்த் திகழும்
மின்பொலி செவ்வேற் கற்பகத்
தருவே மெய்யடி யார்களுக் கருளும்
இன்பினிற் றுளியொன் றேழைக்கு
மருளி யினிப்பிணைக் காட்டியிவ் வுலகத்
துன்பினைத் துடைக்க வுயிர்க்கணைத்
திறக்குஞ் சோதியே யுன்னடி துணையே.

முந்து யானியற்று நல்வினைப் பயனால்
முதிர் வனப்புறு வடிவெடுத்து
வந்தியானென தென்பது கெடப்பார்த்து
மாசிலாவரு ளுளம்பதித்துச்
சுந்தர முருகன் கழலடி போற்றுந்
தொண்டையு மருளிமெய்ஞ் ஞானச்
செந்தமிழ் மொழியுங் கட்டளை
செய்த தேசிகன் திருவடி போற்றி.

என்னு லினிப்பிறக்க ஏலா திறையவனே
பொன்னன ஞானப் புதுமலர்த்தாள்—இன்னே
தரவேண்டு மஞ்ஞை தனிமேலறி யென்முன்
வரவேண்டும் வேண்டும் வரம்.

சிவசிவ முருகா போற்றி தேவர்க டலைவா போற்றி
பவமறுத் தருள்வாய் போற்றி பழனியம் பதியாய் போற்றி
உவமையி லொருவர் போற்றி ஒளிநெடு வேலா போற்றி
சுவையமு தறழுஞ் செஞ்சொற் றோகையர் பாகா போற்றி.

கண்டமட்டில் மும்மலமுங் கையெடுக்குங் கையிலள்ளிக்
கொண்டமட்டில் காலெடுத்துக் கொள்ளுமே—அண்டர்தொ
ஆணிப்பொன் தென்கதிரை யாறுமுக னுடுகின்ற [ழும்
மாணிக்க கங்கை வனம்.

அரகரா வென்றள்ளி யண்ணாந்து வாயிற்
சிவசிவா வென்று கொஞ்சஞ் சேர்த்துப்—பரிவாகக்
கீற்று நுதலிலிடக் கேடில்லைத் தென்கதிரை
நீற்று மலையில்வரும் நீறு.

மந்திரமுந் தானே மருந்து மதுதானே
சுந்தரமுந் தானாகத் தோன்றுமே—எந்தைபிரான்
சோதிவடி வேற்குமரன் சுப்பிரமண் யன்கதிரைப்
பூதிமலை தந்த பொடி.

கூனற் கிலைநுதலாள் கோல நெடுவிழியாள்
மானுக்குப் பிள்ளைவள்ளி மாப்பிள்ளையும்—தானும்
விருப்பிலே யாடுமலை நீறுவினைப் பஞ்சுப்
பொருப்பில் நெருப்புப் பொறி.

ஆறு முகம்வாழி ஆறிரண்டு தோள்வாழி
பேறுதவும் வள்ளிதெய்வப் பெண்வாழி—ஏறு
மயில்வாழி தண்டை மலரடியும் வாழி
அயில்வாழி வாழி யடியார்.

ஆறு முகமுண் டணிவேல் மயிலுமுண்டு
கூறு படுமிரண்டு கொம்புண்டு—தேறும்
அருளுண்டு பண்டை யடிமையுண்டு மூல
விருளுண்டா காதே கெடும்.

ஐயா முருகா வறுமுகவா பன்னிரண்டு
கையா கருணைக் கதிர்வேலா—ஓய்யார
மானமயில் வீரா வனக்குறத்தி கேள்வதெய்வ
யானைகண வாவென்னை யாள்.

## பழமுதிர்சோலை.

### தங்கமே தான்.

'பொருளிலார்க் கிவ்வுலகமில்லை' என்னுஞ் சொல்லின் உண்மையை உணராத புல்லோர் வாயிலதனைக் கேட்டு 'இவ்வேழ்மைக்கு யானிலக்காகவோ'வென அழுங்குவார் எல்லோரும் மதியிலா இழுதைகளென்பதற் கையமில்லை. தன்பெருமை தெரியாமல் மயங்குமொரு மனப்பான்மையது. பேரும் புகழும் முத்திரையாய்ப் போடாவிடினும் மனிதனெவ்வொருவரும் தன்னளவில் தங்கமே யென்றும்,எத்தனை யேழையாயினும் உத்தமனே மானிடருள் மன்னவன் ஆவானென்றும் அருஞ்சொல்லால் அமைத்துப்பாடிய ஸ்காட்லாண்ட் கவிச் சிங்கம் ராபர்ட் பர்ன்ஸ்(Robert Burns)பாடிய கவி யொன்றை எம்மிதழ் வழி கேட்க நண்பர்காள் இன்று வம்மின்:—

**FOR A' THAT AND A' THAT.**

Is there, for honest poverty,
 That hangs his head, and a' that?
The coward-slave, we pass him by,
 We dare be poor for a' that!
 For a' that, and a' that,
  Our toils obscure, and a' that;
 The rank is but the guinea stamp;
  The man's the gowd for a' that.

What tho' on hamely fare we dine,
 Wear hodden-gray, and a' that;
Gie fools their silks, and knaves their wine,
 A man's a man for a' that.
 For a' that, and a' that,
  Their tinsel show, and a' that;
 The honest man, tho' e'er sae poor,
  Is King o' men for a' that.

Ye see yon birkie, ca'd a lord,
 Wha struts, and stares, and a' that;
Tho' hundreds worship at his word,
 He's but a coof for a' that:
 For a' that, and a' that,
  His riband, star, and a' that,
 The man of independent mind,
  He looks and laughs at a' that.

A prince can mak a belted knight,
 A marquis duke, and a' that;
But an honest mans's aboon his might,
 Guid faith he mauna fa' that!
 For a' that, and a' that,
  Their dignities, and a' that,
 The pith o' sense, and pride o' worth,
  Are higher rank than a' that.

Then let us pray that come it may,
 As come it will for a' that;
That sense and worth, o'er a' the earth,
 May bear the gree, and a' that.
 For a' that and a' that,
  It's coming yet, for a' that,
 That man to man the warld o'er
  Shall brothers be for a' that.

இல்லாத பேர்களெல்லாம் எண்ணியெண்ணி நண்பர்காள்,இறுமாந்திருக்குமொரு புனிதவுரை யன்றோவிது! உலகத்தினுறு பொருளுணராமல் கைப்பொருளைக் கணக்கிட்டுச் செம்மாந்து திரிவாரெல்லாம் இதனைக் கேட்டபின் இதயமுடைந்து அழுங்காரெனின் அவர்களிற் பெரிய இழுதைகள்யாரே உளர். 'இந்தத் திராக்ஷை பழம் புளிக்கும்' என்ற பான்மையில் பேசுமொரு புன்மையே பர்ன்ஸ் அனைய புலமையோர்க் கில்லை. இவ்வித்தகர் வயலெலி யொன்றிற் குரைத்த வார்த்தை நினைவிலிருக்குமேல் (வால்யூம் 1. பக்கம் 157) வஞ்சனைக்கும் இவர்க்கும் வெகுதூரமென்பது தெரியலாகும். மனமாண்பு இல்லாதாரே மண்விளை பொருளைநச்சி இவ்வுலகந் தமக்கிருப்பதாக் கருதிச் சாவார். ஊசியின் காதில் ஒட்டகம் நுழையலாமாயினும் பணமுடையோன் துறக்கவாயில் கடக்கலாகான் என்னப்பகரும் கிறிஸ்தவ வேதம். அன்பர்காள், "பொருளுளார்க்கு அவ்வுலகமில்லை, அருளிலார்க் கிவ்வுலகமும் இல்லை" என்னவே அம்மூதுரையை இனி மாற்றிக்கொள்வீர்.

"சபரி"

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:
SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS
NANJANGUD TOOTH POWDER
டிப்போ, பம்பாய்
கல்கத்தா
மதுரை
காஞ்சீபுரம்.



# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்:—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம்:— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி:—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம்:—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம்:—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம்:—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன்:—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம்:—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்தன.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

இறும்! இறும்!!

## வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனு பஜார், மதராஸ்.

Unique Philosophical Works!!! By
D. Gopaul Chetty, Late Editor, "New Reformer"

**I. Chidambara Rahasyam Revealed**
First book of its kind ever published PRICE RE. 1.
II. பதி பசு பாச விளக்கம் (மொழிபெயர்ப்பு) ரூ. 1½
இந்நூலில் திரிபதார்த்தங்களின் தன்மைகளும் தொழிற்பாடுகளும் இதுவரையில் யாவராலும் கூறப்படாத நூதன வழியில் அதிசயிக்கும்படி விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. (504 பக்கங்கள் கொண்டது).
III. பரம இச்சா ஞான தீபிகை (குறைந்தவிலை) அ. 8.
Address Orders to :—D. GOPAUL CHETTY,
ROYAPETTAH, MADRAS.

## தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை. விலை ரூ. **1-0-0.**

முத்தையா புக் டிப்போ,
தபால் பெட்டி 99, சென்னை.

புதிய பதிப்பு-புகழேந்திப் புலவர் அருளிய

**நளவெண்பா**

மூலமும், (தெளிபொருள் விளக்கமும்) அகல உரையும் செய்யுள் தலைப்பு, பதவுரை, கருத்துரை, விசேஷ இலக்கண இலக்கியக் குறிப்பு முதலியவற்றுடன் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டது. நேர்த்தியான கலிகோ பயிண்டுடன் விலை ரூபா 2. "கலா நிலயம்" சந்தாதாரர்களுக்கு ரூபா 1-12. மநு நீதி சதகம் அணா 8. தபால் கூலி வேறு.

| | | | |
|---|---|---|---|
| ஆனந்த ராமாயணம் 9 காண்டம் 14 படம் கலிகோ பயிண்டு | 6 | 0 | 0 |
| நீதிநெறிவிளக்கம் மூலமும் விருத்தியுரையும் | 1 | 8 | 0 |

எஸ். பி. சுந்தரம் கம்பெனி,
3 பீட், பார்க் டவுன், சென்னை.

Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

Insured for how much?
Is it sufficient?
Will it hurt you to make little sacrifices to pay your Life Insurance premium?
Can we satisfy you?
For Literature
Apply to :—
**T. ANANTACHARI**, B.A.,
Branch Secretary.
NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

**பெருமாள் திருமொழி**

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

**ஆறெழுத்தந்தாதி**

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

**கம்பராமாயணம்—பாலகாண்டம்**

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

**ஏமாங்கதத் திளவரசன்**

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

**முருகன்—ஓர் உழவன்**

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல்நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



# வர்த்தமானம்

ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் சிறை செல்லுகையில் ஸ்ரீமான் சத்திமூர்த்தி ஐயரை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நியமனம் செய்துள்ளார் என்றும், அவரும் தலைமை பூண்டு காரியங்களைச் செய்ய ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், இன்னும் ஒருவாரத்தில் ஸ்ரீமான் ஐயர் தமது வேலை திட்டத்தை வெளிப்படுத்தி, அத்திட்டப்படி வேலை துவக்குவாரென்றும் தெரிகின்றது.

***

சென்ற சனியன்று சென்னையில் மந்திரிசபை ஜஸ்டிஸ் கட்சித் தலைவரான ஸ்ரீமான் முனுசாமி நாயுடுவால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீமான் முனுசாமி நாயுடு முதன் மந்திரியாகவும், மதுரை பாரிஸ்டரான பி. டி. ராஜன் இரண்டாவது மந்திரியாகவும், திருநல்வேலி வாசியான ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியார் மூன்றாவது மந்திரியாகவும் நியமனம் பெற்றனர். திங்களன்று ராஜ விசுவாஸப் பிரமாணம் செய்து விட்டு அவர்கள் மூவரும் தங்கள் பதவிகளை ஏற்றனர்.

***

ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், சிறையிலிருந்து வெளிவந்ததும் சென்னையில் நிகழ்த்திய இரண்டு பிரசங்கங்கள், ஜனங்களினிடம் கலவரத்தை உண்டுபண்ணக் கூடியவையென்று ஜாமீன் வழக்குத்தொடரப்பட்டுச் சென்றசனியன்று ஜியார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பெற்றார். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் வழக்கில் கலந்து கொள்ளவில்லை. மாஜிஸ்டிரேட் முடிவில் நன்னடக்கைக்கென ரூ. 500 ஜாமீன் தருமாறுகேட்க, ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் மறுக்கவே, ஒருவருஷத் தண்டனை விதிக்கப்பெற்றது.

***

சென்னை ராஜதானியிலிருக்கும் ஜெயினர்களின் ஜனத்தொகை குறைவானபடியினால், அவ்வகுப்பினரின் உரிமைபாதுகாக்கப்படவேண்டுமென்று, ஜெயினர்களின் மடாதிபதி சென்னைகவர்னருக்கு விடுத்துள்ள தந்திச்செய்தி வருமாறு:—இம்மாகாணத்தில் ஜெயின வகுப்பினர் குறைவான தொகையினர். அன்னவர் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாதலால், அவர்களுக்கெனச் சட்ட சபையில் ஓரிடம் வேண்டும். அந்தவிடத்திற்கு ஆரணிவாசியான ஸ்ரீமான் தனதேவர் ஜெயினர் பிரதிநிதியாக நியமனம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

***

"பிரேஸிலில் நாட்டில் அரசியல் புரட்சி ஏற்பட்டது. அந்நாட்டுக் குடியரசுத்தலைவர் கலகம் வலுக்கவே தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். பிரேஸிலில் ராணுவப் பள்ளி மாணவர்கள் இதற்குக் காரணம் என்றும், கப்பற் படையினரும் ராணுவக் காரர்களும் இவர்களுடன் சேர்ந்துகொண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. கலகக்காரர்களின் தலைவர் அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டார். எதிர்க்கட்சியாரின் பத்திரிகை ஆலயங்கள் தாக்கப்பட்டன. எனவே ஜனங்கள் பீதியுடன் வெளியில் புறப்படாதிருக்கின்றனர். பழைய தலைவர் லூயி சென்ற விடம் தெரியவில்லை. அவர் கட்சியைச் சேர்ந்தவர் சிலர் கைது செய்யப்பட்டனர்" என்று அயல் நாட்டுச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையின் சார்பில் ராமநாதபுரம் சமஸ்தான வித்வான் ஸ்ரீ ராகவையங்கார் சென்றவாரம் 'நம்மனோர் கல்வி' என்பதுபற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அப்பொழுது அவர் கூறியதின் சுருக்கம் வருமாறு :—"ஒவ்வொரு மனிதனும் தேவருணம், பித்ருருணம், முனிவருணம் என்னும் மூன்றுவிதக் கடன்களை ஆற்றவேண்டும். இவ்வாறான ருணங்களைச் சரியே கழிக்கவேண்டுமெனின், இன்னதற்குக் கல்வி அவசியமாகும். ஆகவேதான் கல்வி முளைத்து, ஞானவிக்யானங்களாகிய மரமாய், தவம் என்னும் கிளைவிட்டு, அன்பெனும் அரும்பு பூத்து, போகமென்னும் கனியைத்தரும் என்று கம்பர் கூறுகின்றார். இதனால் கல்வி ஒருவனுக்குத் தவத்தை உண்டு பண்ணுவதற்கும், அன்பைப் பெருக்குவதற்கும், அறம் செய்யுமாறு தூண்டுவதற்கும், அதனால் தனக்கும் மற்றவர்க்கும் ஆனந்தத்தைத் தருவதற்கும் காரணமாகின்றது. இத்தகைய நலங்களைத் தரவல்ல கல்வியையே பாரதமக்கள் கைக்கொள்ளவேண்டும். கடவுளே பிறந்து கல்வியை வளர்த்தார் என்றால் கல்வியின் பெருமையைப் பேசவும் வேண்டுமோ?

***

பீஹார் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியார் பின் வரும் அறிக்கை யொன்றை வெளியிட்டிருக்கின்றனர்:—காந்தியடிகள் சட்டமறுப்பைத் துவக்கியதும், பீஹார் மாகாணக் காங்கிரஸ்காரர்களும் சட்டமறுப்பு வேலையில் ஈடுபட்டனர். அதுமுதல் இந்த மாகாணத்தில் கிராம நிர்மாண வேலை ஊக்கத்துடன் செய்யப்படலாயிற்று. ஸரான், சாம்பிரான், மாங்கீர் முஸபர்பூர் ஜில்லாக்களில் நடக்கலான பிரசார முயற்சியால் பல கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்துச் சபைகள் நிறுவப்பட்டன. இன்னும் இம்முயற்சி பயனுள வழியில் நடந்து வருகின்றது. இதுவரையில் நிறுவலான பஞ்சாயத்துச் சபைகளில் சில ஸிவில் வழக்குக்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஜனங்களும் இச்சபைகளின் முடிவை ஏற்றுவருகின்றனர். தார்ஹாக் என்ற விடத்தில் கடந்த ஆறுமாத காலமாக ஒரு வழக்குக்கூட நீதிஸ்தலத்திற்குச் செல்லவில்லை. சாரலி, தாணு என்னும் இரண்டு கிராமங்களில் உள்ள பஞ்சாயித்துச் சபைகளில் சென்ற இரண்டு வாரங்களில் 68 வழக்குக்கள்வரை முடிவு செய்யப்பட்டுள்ளன. அதிகாரிகள் இப்பஞ்சாயத்து சபைகள் வளரலாவன கண்டு விரும்பவில்லைபோலும். சாம்பரான் ஜில்லாவில் நீதிஸ்தலத்தில் விசாரணையிலிருந்த வழக்குகளை பஞ்சாயத்து சபையார் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதற்காக, பஞ்சாயத்து சபை வேலையில் ஈடுபட்டுள்ளவர்களில் 33 பேர் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்ட மறுப்பு இயக்கம் துவக்கிய நாள்தொட்டு இதுவரை இந்தமாகாணத்தில் 9261 பேர் சிறையிலிடப்பட்டுள்ளார்கள். அடக்குமுறை காரணமாகக் காங்[illegible] வேலை குறைவுபடவில்லை. அன்னியத்து[illegible] காரவேலையும் தீவிரமாகச் செய்யப்பட்டு [illegible]

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்க ரூ. அ
ளுடன்)—மூன்று பாகம் ... 18 8
தமிழ்மொழி அகராதி
The Coronation Tami Dictionary ... ... 10 0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.

வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

---

## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.



## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள்ள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.


---


## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல்
சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“ கலா நிலயம் ”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


... Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)